இலவச வெளியீடு: GERMANY , ENGLAND வைகாசி.May. 2017

Free Circulation

வெற்றிமணி

Vettimaniy

மணி 67

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களும் வீதி விபத்துக்களும்!

காலையிலா மாலையிலா
நாம் உயரம் அதிகம்!

வலி ஓர் இடம்
நோய் வேறிடம்

Dr IN Page 09

MAY DAY! Page 22

S.K.Silks & Gold Paraadise

15 YEARS CELEBRATING தடம் பதிக்கிறது

மாபெரும் ராஜமுத்திரை

அழகிய சேலைகள்
என்றும் புதுப் புது வரவாகப்
பூத்துக்குலுங்கும்
சோலை நமது சேலை மாளிகை

Mr.P.Sritharan.
Proprietor

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Page.9

கனின் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740
Page.08

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund

வானில் வட்டமடித்த விமானங்கள்
இனித் தரையிலும் வட்டம் அடிக்கும்!

Mr. Clever with his model of air port to be built over buildings.

Here is an artist's conception of completed London aerodrome, built over roofs of buildings in heart of city, making landing field easily accessible to air passengers.

WITH the rapid growth of airplane transportation, the air port of the future may be moved up into the center of the city where it will be easily accessible. A bold step in this direction has been taken by Charles Clever, a London architect, who has constructed a model for a proposed airport to be located in the heart of London. The landing field consists of four runways arranged in the form of a giant wheel, the entire structure being supported by the buildings over which it is erected, as illustrated.

54 *Modern Mechanics and*

London to Build Mid-City Air Port

வட்ட வழிவ விமான ஓடுபாதை!

குறுகிய இடத்துள் நீண்டதூரம் ஓடவேண்டும் என்றால் வட்டமடித்தல் என்பது யாவருக்கும் தெரியும். பாடசாலை விளையாட்டுப் போட்டிகளிலும், ஓடும் பாதை வட்டமாக அமைக்கப்பட்டு இருக்கும். ஏன் மாமரத்தைச் சுற்றி நாம் சிறுவயதில் 5 மைல்கள் சைக்கிள் ஓடவில்லையா?

750 மீ. நீளமாக இருக்கும் பாரிய கடல் கப்பல்களின் மேல்தளத்தில் சுற்றி ஓடினால் 2.கி.மீ தூரம் ஓடலாம். பத்து தடவை சுற்றி ஓடினால் 20கி.மீ ஓடலாம். மேற்கூறிய சிறு கணித முறையைப் பயன்படுத்தி குறகிய இடத்தில் பெரிய விமானங்கள் ஏறி இறங்க வட்ட வடிவமான விமான ஓடு பாதை அமைக்க ஒரு யோசனையை நெதர்லாந்து நாட்டை சேர்ந்த ஹென்க் ஹெஸ்லிங்க் என்ற பொறியாளர் அறிமுகம் செய்துள்ளார்.

அடுத்த 5 ஆண்டுகளில் இந்த வட்ட வடிவ ஓடுபாதை திட்டத்தை நேரடியாக பயன்படுத்தி பார்க்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். தற்போது விமான ஓடுபாதைகள் நேராக அமைக்கப்படுவதே வழக்கமாக உள்ளது. இந்த நிலையில், விமான போக்குவரத்து வெகு வேகமாக வளர்ச்சி கண்டு வரும் நிலையில், விமான நிலையங்களின் கட்டமைப்புகளில் பல மாறுதல்களை செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது.

இந்த வட்ட வடிவ ஓடுபாதையில் விமானங்கள் இறங்குவது குறித்த ஆய்வை சிமுலேட்டர் கருவி மூலமாக அவர் வெற்றிகரமாக சோதித்து பார்த்துள்ள தாகவும் பிபிசி வெளியிட்டு இருக்கும் செய்தியில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

விமானங்கள் தரை இறங்கும்போதும், மேலே எழும்போதும் சூறாவளி காற்றால் நிலை தடுமாறுவதை பார்த்து, அதற்கு தீர்வு காணும் முயற்சியில் இறங்கினேன். எனது வட்ட வடிவ ஓடுபாதை திட்டம் மூலமாக விமானங்கள் மேலே எழும்போதும், தரை இறங்கும்போதும் காற்று வீச்சு காரணமாக பாதிக்கப்படாது.

சுமார் 3.5 கிமீ விட்டத்திற்கான வட்ட வடிவ ஓடுபாதையில் வணிக ரீதியிலான விமானத்தை தரை இறக்குவது குறித்து சிமுலேட்டர் சாதனங்களுடன் அவர் ஆய்வு நடத்தி இருக்கிறார். இது சாதாரண ஓடுபாதைகளை விட மூன்று மடங்கு நீளமானது.

இந்த வட்ட வடிவ விமான ஓடுபாதையில் ஒரே நேரத்தில் மூன்று விமானங்களை மேல் எழுப்பவும், தரை இறக்கவும் முடியும் என்கிறார் ஹென்க். இதனால், பெரிய விமான நிலையங்களில் போக்குவரத்தை எளிதாக கையாள முடியும் என்று கூறுகிறார்.

இந்த வட்ட வடிவ ஓடுபாதையில் தரைஇறங்குவதற்கு விமானிகளுக்கு அதிக பயிற்சிகள் தேவை இல்லை என்று தெரிவிக்கிறார் ஹென்க். அதேநேரத்தில், விமான நிலையங்களில் விசேஷ தொழில்நுட்பங்களும், கட்டமைப்பும் தேவைப்படும்.

விமானம் தரையிறங்கும்போது பயணிகள் சிறிய அசைவை உணர்வார்கள். மற்றபடி, பெரிய அளவிலான பிரச்னைகள் இருக்காது என்று ஹென்க் கூறுகிறார். மேலும், இந்த விமான ஓடுபாதை மூலமாக இரைச்சல் மற்றும் வளிமண்டல மாசுபடுதல் வெகுவாக குறையும் என்றும் தனது புதிய முயற்சிக்கு வலு சேர்க்கிறார்.

1960ம் ஆண்டில் அமெரிக்க ராணுவம் மட்டும் இந்த வட்ட வடிவ விமான ஓடுபாதை பரிசோதித்து பார்த்தது. ஆனால், வணிக ரீதியில் இயக்கப்படும் விமானங்களுக்கான முதல் முயற்சியாக இந்த திட்டம் தெரிவிக்கப்படுகிறது வட்ட வடிவ ஓடுபாதை திட்டத்திற்கு பல சாதகங்களை ஹென்க் தெரிவித்தாலும், இது புதுமையான நுட்பம் இல்லை. விமான தொழில்நுட்பம் வளர ஆரம்பித்த காலம் தொட்டு இந்த யோசனை முன் வைக்கப்பட்டு வருவதாக பொறியாளர்கள் தெரிவிக்கின்றனர். இது மிகவும் அபாயகரமான தாகவும் சில பொறியாளர்கள் கூறுகின்றனர். லண்டனில் இட நெருக்கடி களைப் போக்க கட்டிடங்களின் மேல் (City Rooftop Airport Design) வட்டவடிவமான ஓடுபாதைத் திட்டம் 1931 இல் முன்கைக்கப்பட்டது அதன் வரைபடத்தை மேலே காணலாம்.

நீங்கள் புதிய மனை அமைக்கவோ,
கடன் பெறவோ, எதுவானாலும்
உடனடி உதவி எங்களிடம் உண்டு

50.000 - 122.000 யூரோ அரசாங்கம் வழங்கும் குறைந்த வட்டிப் (0,5%) பணத்தைப் பெற்றிடவும், மற்றும் வீடு கட்டுவதற்கோ அல்லது வாங்குவதற்கோ தேவையான சகல வங்கிரீதியான, சட்டரீதியான (Notar) உதவிகளையும் மிகக் குறுகிய காலத்தில் செய்து தருகின்றோம்!

வீட்டுக்கடன்
1,0%
வட்டிவீதத்திலிருந்து

தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/10876361
0152/53961138
Th. Gobinath

திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி

சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

அனைவருக்கும் எங்கள் உழைப்பாளர்தின வாழ்த்துக்கள்

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

கவிஞர்.வி.க

ஓசை 248

ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

"ஓவியக்கலைவேள்"

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:

Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Sanje:07824 61 83 83

vai g (U.K) 00 44 7788 195962

Vettimaniy Ltd

Company No: 8876276

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களும்

வீதி விபத்துக்களும்!

– அனித்தா செல்வராஜா பூஷன்.

முன்பெல்லாம் வீதிவிபத்து என்பது எப்போதாவது ஒரு முறைதான் நடைபெறும். ஆனால் இன்று நாம் தினசரி எம்மண்ணில் ஏற்படும் வீதிவிபத்துக்கள் தொடர்பாகவே செய்திகளை காண்கிறோம். இவற்றில் சில விபத்துக்கள் தொடர்பான காணொளிகள் மற்றும் நிழற்படங்களை பார்க்கவே முடிவதில்லை. மிகவும் கோர விபத்துக்களாகவே இருக்கின்றது. குறிப்பாக வடபகுதியில் மோட்டார்சைக்கிள் விபத்துக்களைப் பொறுத்தவரையில் வாழ்ந்து சாதிக்க வேண்டிய இளைஞர்கள் பலர் அநியாயமாக மரணிக்கின்றனர் அன்றேல் அங்கவீனமாகின்றனர்.

கடந்தகால யுத்தத்தால் பல இளைஞர்கள் மரணித்தும், அங்கவீன மாகவும் உள்ளனர். ஆனால் இன்று அந்த நிலைமையை இந்த வீதிவிபத்துக்கள் ஏற்படுத்தி விடுமோ என அஞ்சவேண்டியுள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் இன்று ஒருநாளில் மூன்றுமணி நேரத்திற்கு ஒருவர் வீதிவிபத்தினால் இறப்பதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

போர்க்கால சூழலில், வடக்கைப் பொறுத்தவரையில் வாகன அனுமதிப்பத்திரம் என்பது எல்லோரிடமும் இருந்ததில்லை. ஆனால் இன்று வாகன அனுமதிப் பத்திரம் இருந்தால் மட்டுமே வாகனங்களை செலுத்த முடியும். பரீட்சைக்காக மட்டுமே வீதிபோக்குவரத்து விதிகளை படித்துவிட்டு, பின் வாகனம் செலுத்தும் போது சிலர் இதனை பின்பற்ற தவறிவிடுகின்றனர். ஏனெனில் வீதிசமிக்ஞை விளக் குகள் வீதி ஒழுங்கிற்காகவே உள்ளன. ஆனால் சிலர் மஞ்சள் விளக்கு எரிந்ததும் "அடடா சிவப்பு விளக்கு எரியப் போகுது.. அதுக்கிடையில் எதிர்ப் பக்கத்திற்கு கடக் கோணும்" என்று இன்னும் வேகமாக வாகனங்களை செலுத்துகின்றனர்.

இன்று வடபகுதியில் மது மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதற்கு பெரும்பாலும் இளைஞர்களே பலிக்கடா ஆகிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான மது, போதைப்பொருடகள் பாவித்து விட்டு அளவுக்கதிகமான வேகத்தில் வண்டியை செலுத்து வதாலும் தம்மைத்தாமே மாய்த்துக்கொள்ளும் நிலைமைக்கு தள்ளப்படுகின்றனர்.

கைத்தொலைபேசியில் கதைத்துக்கொண்டு வாகனம் செலுத்தக்கூடாது என்பது சகலருக்கும் தெரியும். ஆனாலும் மோட்டார்வண்டியை செலுத்தும்போது

உயர்பரீட்சைகளில் சித்தியடைந்தாலும் பரிசாக பெறுகின்றனர். சித்தியடையாமல் கல்வியில் பின்தங்கினாலும் ஒரு வாகனத்தை எடுத்து பிழைத்துக்கொள் என்று பரிசளிக்கின்றனர்.

தலைக்கவசத்தினுள் கைத்தொலைபேசியை காதருகில் செருகிவிட்டு உரையாடியவாறே செல்கின்றனர். சிலர் தலைக்கவசம் அணியாது காவல்துறையை கண்டதும் அணிவர். இதனைவிட முன்னால் செல்லும் வாகனங்களை முந்திச்செல்ல முற்படுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங் களிலும் விபத்துக்களை சந்திக்கின்றனர்.

இளைஞர்கள் சிலருக்கு பெற்றோர் அன்றேல் மூத்த சகோதரர்களே மோட்டார் சைக்கிள் வாங்கி கொடுக்கின்றனர். வெளிநாடு வாழ் உறவுகளினால் அனுப்படும் பணமும் ஓர் காரணமாகும்.. ஏனெனில் சிலர் வாகனங்களை உறவுகளி டமிருந்து பரிசாகவே பெறுகின்றனர்.

உயர்பரீட்சைகளில் சித்தியடைந்தாலும் பரிசாக பெறு கின்றனர். சித்தியடையாமல் கல்வியில் பின்தங்கினாலும் ஒரு வாகனத்தை எடுத்து பிழைத்துக்கொள் என்று பரிசளிக் கின்றனர்.

வாகனங்கள் வாங்குவது தவறன்று. தமது உயிரைக்கூட பெறுமதியாக நினைக்காது வேகமாக ஓட்டுவதே தவறு. ஒருவரது இழப்பால் ஒட்டுமொத்த குடும்பமுமே பரிதவித்து நிற்கின்றது. இதிலும் மோட்டார் சைக்கிள் வாங்கி ஒருகிழமைதான், இரண்டு நாள்தான் என்ற விபத்துக்கள் தொடர்பான செய்திகளை பார்க்குமிடத்து நெஞ்சுவலிக் கின்றது.

வெளிநாடு வாழ் மக்கள் கூட இன்று இலங்கைக்கு விடுமுறை செல்வதென்றால் இந்த விபத்துக்கள் தொடர்பான மனப்பயத் துடனேயே செல்கின்றனர். ஒட்டுமொத்த சமூகமும் இதுதொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். குறிப்பாக குடும்பங்களிலிருந்தே பிள்ளைகளுக்கு சரியான வழிப்படுத்தல்கள் அவசியமாகும்.

தொடர்ச்சி 6 ம் பக்கம்

Hamm நகரில்....

YOGAN

IMPORT&EXPORT

அழகிய பட்டுச் சேலைகள் Party சாறிகள் மற்றும்
மங்கையர் மனங்கவரும் பஞ்சாபிகள்
அனைத்திற்கும் நாடுங்கள்

உங்கள் இலத்திற்கு வேண்டிய சமையல்
உபகரணங்கள் அனைத்தும் மலிவாகக் கிடைக்கும்.

02381 / 9735620 - 0163 23 17 927

Hamm Hbf,ல் இருந்து 500 மீற்றர் அருகில்.

Hugo-Küching-Str .6 - 59067 Hamm

இந்த வையகத்தில் வைகாசி மாதத்தின் சிறப்பு!

கௌசி



ஜேர்மனியர்கள் கூட தமது திருமணநாளை இந்த இளவேனிற்காலத்திலேயே தெரிவுசெய்கின்றனர்.



பொதுவாகவே தமிழர்கள் திருமணநாளை அநேகமாக வைகாசி மாதத்திலே வைப்பது வழக்கமாகப்படுகின்றது. தமிழர்கள் மட்டுமா? ஜேர்மனியர்கள் கூட தமது திருமணநாளை இந்த இளவேனிற்காலத்திலேயே தெரிவு செய்கின்றனர்.

வாழ்க்கையின் ஆன்மீகப் பற்றுள்ளவர்களுக்குக் கூட இக்காலம் பொற்காலமே. சரவணப் பொய்கையிலே சிவபெருமானுடைய நெற்றியில் இருந்து வந்த தீப்பொறிகளால் தோன்றிய 6 குழந்தைகளை உமையாள் ஒன்றாய்ச் சேர்த்து ஆறுமுகக்கடவுளாய் உருவாக்கிய தினமும் வைகாசி விசாக தினமே ஆகும்.

அன்புதான் இன்ப ஊன்று என்று உலகத்திற்கே அன்பைப் போதித்து புலாலுண்ணாமையை வலியுறுத்தி, செல்வச்செழிப்பை துச்சமெனக் கருதி வெறுத்து, உலகப்பற்றைத் துறந்து போதிமரத்தடியில் ஞானம் பெற்ற கௌதம புத்தர் நேபாள லும்பினி என்னும் இடத்தில் பிறந்தது இவ்வைகாசி மாதத்து பௌர்ணமி விசாகதினத்திலேயே ஆகும். வைகாசி மாத விசாக தினத்திலேயே. அவர், பிறந்தது, ஞானம் பெற்றது, இறந்தது அனைத்தும் நடைபெற்றுள்ளது.



பொதுவாகவே மேமாதம் என்றவுடன் எம் எண்ணத்தில் முதலில் தோன்றுவது விடுமுறை, தொழிலாளர் தினம். அதுவே எமக்கு மிக அவசியமானது என்பாரும் உண்டு. 18 ஆம் நூற்றாண்டு இறுதியிலும் 19ம் நூற்றாண்டு ஆரம்பப்பகுதியிலும் வளர்ச்சியடைந்த நாடுகளிலிலுள்ள தொழிலாளர்கள் 8 மணிநேரம் வேலை கேட்டு நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தின் விழைவே இன்றைய உலகலாவிய ரீதியில் நடக்கும் மேதினக் கொண்டாட்டமும் அதன் மூலம் எமக்குக் கிடைக்கும் விடுமுறைதினமும் ஆகும். ஆனால், கனடா, அமெரிக்கா செப்டெம்பர் மாத முதல் திங்கட்கிழமையில் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகின்றன.

வைகாசி மாதத்தில பந்தலொன்று கட்டி ரெண்டு வாழைமரம் வைக்கப்போறேன் காலத்தின் ஓட்டத்தில், உருண்டு செல்லும் வருடக் கணக்கில், மீண்டும் ஒரு வைகாசி வாழ்க்கையின் பக்கத்தில் வந்து நிற்கின்றது. சென்ற காலங்களை மீட்டிப் பார்க்கும் வேளையிலே அதி அற்புதமான மாதமாய்த் தன்னைக் காட்டி கண் விழிக்க வைக்கின்றது. வைஸ்ணவர்களால் மாதவ மாதம் என்று கருதப்பட்டு சிறப்புப் பெறுகின்றது.

காலங்களை இளவேனிற்காலம், முதுவேனிற்காலம், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக் காலம் என எம் முன்னோர்கள் பிரித்துப் பார்த்த போது, வைகாசி மாதம் என்பது இளவேனிற்காலமாய்க் காலப்பரப்பில் வசந்தகாலமாய் வளம் காட்டி நிற்கின்றது. பட்டமரங்கள் துளிர்க்கக் காண்கின்றோம். மெல்லிய தளிர்களில் பச்சைப்பசேலென அரும்பி நிற்கும் இலைகளையும், வண்ணக் கோலங்காட்டி புன்னகை வீசும் மலர்க் கொத்துக்களும், வகைவகையாய் அழகு காட்டும் ரூலிப் மலர்களின் வசந்த வருகையும் இக்காலத்தின் சொர்க்கங்கள் அல்லவா! அதிகூடிய குளிருமில்லை. அதிகூடிய வெப்பமுமில்லை. சில்லென்ற குளிரும் தேவையான வெப்பமும் வளரும் பயிர்களைச் சுறுசுறுப்பாக்கும் காலநிலை. தடிப்பான மேலங்கிகள் பெட்டிகளுள் அடங்க மெல்லிய மேலங்கிகளுக்கு வேலை கொடுக்கத் தொடங்கும் காலம் அல்லவா!

காலங்கள் புத்துளிர் புனைவது போலவே வாழ்க்கையின் வசந்த பொழுதுகளும் இப்பருவகாலத்திலேயே முகிழ்கின்றது. இருமனங்கள் இணைந்து சட்டரீதியாக திருமண பந்தத்தில் இணைகின்ற காலங்கள் இவ்வசந்த காலங்களே. "வைகாசி மாதத்தில பந்தல் ஒன்று கட்டி ரெண்டு வாழைமரம் வைக்கப்போறேண்டி" என்ற பாடல் கேட்டிருப்பீர்கள்.

வயலின் அரங்கேற்றம்

செல்வி சஜினி நயினை விஜயன்

செல்வி சஜினி நயினை விஜயன்

06.05.2017 சனிக்கிழமை

எசன் நுண்கலைக்கல்லூரி வயலின் ஆசிரியை திருமதி சோபிகா கார்த்திக் அவர்களின் மாணவியும், திரு திருமதி விஜயன் அவர்களின் புதல்வியுமான சஜினி நயினை விஜயன் அவர்களின் வயலின் அரங்கேற்றம் 06.05.2017 பி.பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Städtisches Mädchengymnasium
Fürstäbtischessinstr 52-54
45355 Essen-Borbeck
Tel:0176 55 77 8752

ESTM Jewellery Dortmund

எங்கள் சேவை
- திருமண ஆபரணங்கள்
- ஓடர் நகைகள்
- திருத்த வேலைகள்

தாலிக்குப் பொன்னுருக்குதல்
- காது குத்துதல்

E.S.T

Our Service
- Wedding Jewellery
- Jewellery Order

Quick Repair of Jewellery
- Wedding Rituals
- Ear and Nose piercing

பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்

ESTM Jewellery | Rheinische Str. 73a | 44137 Dortmund | Tel.: 0231 / 1899023 | Mobil: 01633642642

Bochum

முற்பதிவுக்கு முந்துங்கள்

Lucky Fly Reisebüro

2017 கோடை கால விடுமுறைக்கான முற்பதிவுக்கு முந்துங்கள்!

Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum

www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de

இந்தியா செல்வதற்கான 1 மாத, 2. மாத, 3. மாத விசாக்கள் பெற்றுத்தரப்படும்



Lucky Fly Reisebüro

Allee Str.38-40a
44793 Bochum

Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749



Frankfurt- Colombo
Gulf Air

Tel: 0234-2399032
FaX 0234-79457171

Mob:No: 0179 1484 892

Graphic Design Vettimaniy Ltd

e.mail:siva 0108 @hotmail.com



Allee Str.38-40a
44793 Bochum

Tel: 0234-2399032
FaX 0234-79457171

துரித பணமாற்றுச் சேவை!!!

MoneyGram

WESTERN UNION WU moving money for better

அனைவருக்கும் எங்கள் உழைப்பாளர்தின் வாழ்த்துக்கள்

GALA EVENTHALLE

DORTMUND (Dorstfeld) நகரில் உங்கள் இல்ல சுப காரியங்கள் சிறப்பாக நடைபெற அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய ஒரே மண்டபம்..!

உங்களுக்காக எம்மிடம்...!

- 800 பேர் வரை அமரக்கூடிய அழகிய மண்டபம்
  (டோட்முண்ட் புகையிரத நிலையத்திலிருந்து 15 - 20 நிமிடத்தில் அனைத்து போக்குவரத்து வசதிகளுடன் US கூடிய)
- மேடை, மேசை அலங்காரம் மற்றும் புதிய ரக மணவறைகள்
- புகைப்பட மற்றும் வீடியோ படப்பிடிப்புக்கள்
- உணவு மற்றும் பலகார வகைகள்
- மணப்பெண் அலங்காரம்
- கேக் வடிவமைப்புக்கள்
- பூமாலை, ஐயர், நாதஸ்வரம், தவில், பாட்டுக் குழுகள், நடனக் குழுகள், DJ மற்றும் Karaoke இசை

போன்ற அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தரக்காத்திருக்கின்றோம்...!

தொடர்புகளுக்கு: Th. Gobinath

Auf dem Brümmer 1 | 44149 Dortmund (Dorstfeld)

0152/53961138 | 0231/53375365 | 0231/13029415 | 0231/10876361

நாங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் தனியாகத் தானா இருக்கின்றோம்?

நாங்கள் தனியாகத் தானா இருக்கின்றோம்? வீட்டில் தனியாக இருப்பதைக் கேட்கவில்லை, இந்தப் பிரபஞ்சத்தில் தனியாகத் தானா இருக்கின்றோம்? நம்மைத் தவிர்த்து வேறு ஒரு கோளில் வேற்றுலக உயிரி (alien, extraterrestrial life) இருக்கின்றதா? இந்தக் கேள்விக்கு என்னால் உறுதியாக ஆம் அல்லது இல்லை என்று பதில் கூறவே முடியாது. ஏன், இந்த உலகில் யாருமே ஊறுதியாகப் பதில் கூறமாட்டார்கள், ஏனென்றால் அதற்கு யாருக்கும் பதில் தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் இலகுவாகப் பண்ணலாம்: விண்வெளியில் எங்கேயாவது வேற்றுலக உயிரிகள் வாழ்கின்றன என்ப தற்கான வாய்ப்பு கணித நிகழ்தகவு (probability) படி கணித்து விடலாம். அது எப்படி என்று அறியவிருப்பம் என்றால், கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

முதலில் வேற்றுலக உயிரி என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். வேற்றுலக உயிரி என்றவுடன் எல்லோரும் ஹாலிவுட் திரைப்படங்களில் வரும் நு.வு. போன்ற உருவங்களைத் தான் நினைப்பார்கள். ஆனால், இவ்வாறான பெரும் உருவங்கள் மட்டும் அதில் அடங்குவதில்லை. வேற்றுலக பாக்டீரியா போன்ற உயிரிகள் கூட ஒரு உயிரினம் என்று தான் எடுக்கப்படும். சரி, அவ்வாறான வேற்றுலக உயிரி, விண்வெளியில் ஏதாவது ஒரு கோளில் (planet) தான் வாழமுடியும் என்று எடுத்துக் கொள்வோம். நமது சூரிய குடும்பத்தின் மையத்தில் இருக்கும் சூரியன் என்னும் நட்சத்திரத்தை 8 கோள்கள் சுற்றிவருகின்றன. இதேப் போன்று பெரும்பாலான வேறு நட்சத்திரங்களையும் கண்டிப்பாகப் பல கோள்கள் சுற்றிவருகின்றன என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து விட்டார்கள். எனவே, வேற்றுலக உயிரிகள் வாழ்வதற்கு வாய்ப்பு இருக்கின்றதா என்று கண்டுபிடிக்க, முதலில் விண்வெளியில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன என்பதை அறியவேண்டும்.

விஞ்ஞானம் நம்புவது இது தான்: குறைந்தபட்சம் 100,000,000,000 நட்சத்திரங்கள் புவியில் இருந்து பார்க்கும் போது காணப்படுகின்றன, ஆனால் அவர்களின் கணிப்புப் படி இந்த எண் இன்னும் பல மடங்கு அதிகமாக இருக்கும் என்பது தான். இருந்தாலும் நாம் இந்த எண்ணையே எடுத்துக்கொள்வோம். இதில் பிரம்மாண்டமான விஷயம் என்ன தெரியுமா? இந்த 100,000,000,000 நட்சத்திரங்கள் பால் வழி (milky way) எனப்படும்



Dr.நிரோஷனின் அதிசய உலகம்

விண்மீன் பேரடையில் (galaxy) மட்டுமே இருக்கின்றன! ஆனால், நமது பிரபஞ்சத்தில் இப்படி எத்தனையோ விண்மீன் பேரடைகள் காணப்படுகின்றது. எனவே, அடுத்ததாக விண்வெளியில் எத்தனை விண்மீன் பேரடைகள் இருக்கின்றன என்பதை அறியவேண்டும். இது கூட 100,000,000,000கும் அதிகமாகத் தான் இருக்கும் என்று கணிக்கப்படுகின்றது. அப்படி என்றால் நமது பிரபஞ்சத்தில் குறைந்தபட்சமாக 100,000,000,000 x 100,000,000,000 = 10,000,000,000,000,000,000,000 நட்சத்திரங்கள் உள்ளன. அதாவது 10 கோடி கோடி கோடி நட்சத்திரங்கள் உள்ளன. என்ன நண்பர்களே, இதைப் படிக்கத் தலை சுற்றுகின்றதா?



சரி, அடுத்ததாக இவ்வளவு நட்சத்திரங்களிலும் எத்தனை நட்சத்திரங்கள் நமது சூரிய குடும்பம் போல் கோள்களைக் கொண்டன என்பதைப் பார்ப்போம். இதிலும் கூட ஒரு குறைந்தபட்சமான எண்ணிக்கையை எடுத்து விடுவோம். 1,000,000 நட்சத்திரங்களில் ஒரு நட்சத்திரம் மாத்திரமே கோள்களைக் கொண்ட நட்சத்திரம் என்றும், அந்த ஒரு நட்சத்திரத்தை ஒரே ஒரு கோள் மட்டுமே சுற்றிவருகின்றது என்றும் எண்ணுவோம். அப்படி என்றால் நமது விண்வெளியில் 10,000,000,000,000,000 கோள்கள் உள்ளன.

இனி இந்த 100 கோடி கோடி கோள்களில் எத்தனைக் கோள்களில் உயிர் இருக்கலாம் என்று சும்மா ஒரு மதிப்பீடு போடலாம். 1,000,000 கோள்களில் ஒரு கோளில் மட்டும் தான் உயிர் உருவாகுவதற்கும், வாழ்வதற்கும் சூழல் படைக்கப்பட்டு இருக்கின்றது என்று எடுத்துக்கொண்டால், நமது பிரபஞ்சத்தில் 10,000,000,000 கோள்களில் உயிர் வாழ்வதற்கு வாய்ப்பு இருக் கின்றது என்று இலகுவான கணித முறையில் கூறிவிடலாம்.

நான் ஆரம்பத்தில் கூறியது போல், இந்த எண்ணிக்கை குறைந்தபட்சம் தான். விண்மீன் பேரடையின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பேரடையில் காணப்படும் நட்சத்திரத்தின் எண்ணிக்கையும் உண்மையில் இன்னும் எவ்வளவோ மடங்கு அதிகமானது என்பதை விஞ்ஞானம் சொல்கிறது. விண்வெளியில் ஏலியன்ஸ் உள்ளன என்கிற நம்பிக்கை எனக்கு 100% இருக்கின்றது. ஆனால் ஒன்று, வேற்றுலக உயிரிகளைத் தேடும் நம்மை, எத்தனை வேற்றுலக உயிரிகள் ஏற்கனவே கண்டு பிடித்து விட்டு, தற்போது நமது புவியை நோக்கி வந்துகொண்டு இருக்கின்றதோ யாருக்குத் தெரியும்? வந்தால் என்ன செய்யலாம்? தமிழர்களின் பண்பாட்டின் படி டீ, காப்பி கொடுத்து விருந்தோம்பல் செய்து அனுப்பி விடுவோம். என்ன சொல்கிறீர்கள்?

நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள். விண்வெளியில் நம்மைத் தவிர வேறு உயிரினங்கள் உள்ளனவா?அல்லது மனிதனைப் போல் ஒரு அதிசயம் வேறு எங்கேயும் கிடைக்காதா? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

அடுத்த அதிசயம் ..... அடுத்த பக்கம்

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ்
எங்கும் சேவை!
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளளோம்
www.Nandys.de
e.mail:info@nandys.de
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

காலையிலா மாலையிலா நாம் உயரம் அதிகமாக இருப்போம்?

Dr.நிரோஷனின்

எனது பெயர் நிரோஷன்! காலையிலும் எனது பெயர் நிரோஷன் தான், சாயங்காலத்திலும் எனது பெயர் நிரோஷன் தான். ஆஹா என்னடா வழக்கம் போல் குழப்ப ஆரம்பித்து விட்டேனா? பொதுவாக சில விஷயங்கள் மாறாது. காலையில் எப்படி இருக்குமோ, அதே போல் தான் சாயங்காலத்திலும் இருக்கும். சரி சரி இதை விடுங்கள், உங்களிடம் நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன், அதற்குப் பதில் சொல்லுங்கள் பார்ப்போம். உங்கள் உடலின் உயரம் என்ன? இந்தக் கேள்விக்கு நீங்கள் ஒரே ஒரு பதிலைச் சொல்லிவிட்டு உங்கள் வேலையைப் பார்ப்பீர்கள். ஏனென்றால் இந்தக் கேள்வியில் அப்படி ஒரு விசேஷமும் கிடையாது, சரி தானே? நண்பர்களே, இதே கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்டால், அதற்கு நான் இரண்டு பதில்களைக் கூறுவேன். காலையில் நான் 175 சென்டிமீட்டர், சாயங்காலத்தில் 174 சென்டிமீட்டர் இருப்பேன் என்று கூறிவிட்டு உங்களைக் குழப்பிவிடுவேன். இது என்னடா முட்டாள் தனமான பதில் என்று நினைத்தால், தொடர்ந்து படியுங்கள், ஏனென்றால் இதற்குப் பின்னால் ஒரு அறிவியல் உண்மையே இருக்கிறது.

உங்களால் நம்ப முடியாத இந்த விஷயத்தை வேண்டும் என்றால் நீங்களே சோதித்துப் பாருங்கள். காலையிலும், சாயங்காலத்திலும் உங்கள் உயரத்தை ஒரு முறை அளந்து பாருங்கள். வாயைப் பிளந்துகொண்டு நிற்பீர்கள். நாம் சாயங்காலத்தில் விடக் காலையில் சில சென்டிமீட்டர்கள் உயரமாகத் தான் இருப்போம். அதற்குக் காரணம் என்னவென்றால், பொதுவாக நமது முள்ளந்தண்டு எலும்புகளால் மட்டும் அமைக்கப் படவில்லை. அதில் intervertebral discs என்று அழைக்கப்படும் முள்ளெலும் பிடையான வட்டுகள் காணப்படுகின்றன.

இந்த வட்டுகள் எலாஸ்டிக் (elastic) பஞ்சுகள் போன்று வளைந்து நெளிந்து நமது உடல் அசைவுக்கு மிக முக்கிய காரணமாக இருக்கின்றன. நாம் இரவில் தூங்கும் போது பஞ்சு போன்ற இந்த வட்டுகள், நமது உடலில் உள்ள நீரமத்தை (liquid) உறிஞ்சி எடுத்து விடுகின்றன. பின்னர் காலையில் நாம் தூக்கம் கலைந்து எழுந்ததும், உதாரணத்திற்கு என்னை எடுத்துக் கொண்டால், நான் காலை எழுந்து நிற்கும் போது எனது உடலின் உயரம் 175 சென்டிமீட்டராக இருக்கும்.

காலையில் 175 சென்டிமீட்டர் இருக்கும் நான் எப்படி சாயங்காலத்தில் 174 சென்டிமீட்டருக்குக் குறைந்து விடுகின்றேன். இது புரிவதற்கு முதலில் நாம் காலையில் எழுந்த பின், நடைபெறும் இரண்டு விஷயங்களை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். முதலாவதாக நாம் நடந்து திரிந்து, விளையாடி, வேலை செய்யத் தொடங்கி விடுகின்றோம்.

இரண்டாவதாக நாம் நமது இரு கால்களிலும் நிற்கத் தொடங்கியதும், நமது முள்ளந்தண்டில் புவி ஈர்ப்பு விசை செலுத்தப் படுகிறது. இந்த இரு விஷயங்களாலும் அந்த வட்டுகளில் உறிஞ்சி எடுக்கப்பட்ட நீர்மம் நேரம் போகப் போக கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்றப் படுகின்றது.

அதன் விளைவாக நமது முள்ளந்தண்டின் உயரம் குறைந்து விடுகின்றது. அத்துடன், நமது உடலின் உயரமும் குறைந்து விடுகின்றது.



எனவே காலையில் 175 சென்டிமீட்டர் இருக்கும் நான் நேரம் போகப் போக சாயங்காலத்தில் 174 சென்டிமீட்டருக்குக் குறைந்து விடுகின்றேன். இது தான் இந்த மர்மமான விஷயத்துக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் உண்மை ஆகும்.

நண்பர்களே, இது ஆச்சரியமாக இல்லையா? இந்த விஷயம் உங்களுக்கு முன்பே தெரியுமா? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

சிவ பார்வதி ஜோதிட நிலயம்

SHIVA PARVATI ASTROLOGY CENTRE

சோதிட துறையில் 9 வது சந்திதியினரும்
உலகப் புகழ் பெற்ற சோதிட, கைரேகை நிபுணர்
பண்டித் காளிதாஸ்
Pandith Kallidas

உங்கள் பிரச்சினைகளுக்கு
உடனடி ஆலோசனையும் தீர்வும்
நீங்கள் நீண்டகால நோய்யால்
அவதியுறுகின்றீர்களா?
கல்வி, வேலை, வாய்ப்பு பிரச்சினைகள்,
காதல் விவகாரங்கள்,திருமணம்,கணவன்
மனைவி உறவு, பணம் செலவு, காணி

வழக்குகள், உடல் நோய்கள், பிள்ளைப்பேறு,
எந்த விதமான பிரச்சினைகளாக இருந்தாலும்
தீர்வு காணப்படும்.100 வீதம் தீர்வு
உத்தரவாதம் இன்றே எம்மைக்காண
நேரத்தைப் பதிவு செய்யுங்கள்

தெடார்பு மொழி:
தமிழ் கிந்தி ஆங்கிலம் கன்டம் தெலுங்கு
வாரத்தில் 7 நாட்களும்
காலை 9:00 மணி முதல் மாலை 6:00 வரை

Pandith Kallidas
Wilhelm Str.27
59067 Hamm
+49(0) 151 44 921 486
+49(0) 152 15 670 175

கணவாய்க் கறி யாழ்ப்பாண சமையலின் மகுடம்

ஜுட் பிரகாஷ்

கணவாய்க் கறி ஆறப்போகுது, கெதியா குளிச்சிட்டு வாரும்"

ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் மனிசி அன்பாய் கூப்பிட, பாத்ரூமுக்குள் பாய்ந்தேன். சுடுதண்ணி அளவா வருதா என்று பார்க்க மினக்கெட, "என் மேல் விழுந்த மழைத்துளியே, இத்தனை நாளாய் எங்கிருந்தாய்" பாட்டு சூரியன் FM ல் ஒலிக்க தொடங்கியிருந்தது. Lux சோப் நான் போட, சூரியன் FM இளையராஜாவின் "நீ தானே என் பொன்வசந்தம்" பாட்டு போடுது. 80களில் ஸ்ரீதேவி, Lux சோப் போட்டு குளித்த நாளிலிருந்து.. விடுவம், அது தனிக்கதை.

குளித்து முடித்து, சாமி கும்பிட்டுவிட்டு வர, குத்தரிசி சோறும் கணவாய்க் கறியும் கோப்பையில் எனக்காக காத்திருக்குது. கோப்பையின் ஓரத்தில் கத்தரிக்காய் பால்கறி வேற இடம்பிடித்திருக்குது. கணவாய் கறியை மட்டும் அளவா கிள்ளி சோத்தில் குழைத்து அள்ளி வாயில் வைக்க....சொல்லி வேலையில்லை, சொர்க்கத்தின் வாசற்படி தெரிந்தது.

"எப்பிடியிருக்கு ?" மனிசி கேட்டா

"அந்த மாதிரி.. கணவாய் கறி வைத்த தங்க கைக்கு நித்யகல்யாணியில் ஒரு வைரமோதிரம் வாங்கி தாறன்" காதல் வாக்குறுதியொன்றை வாரி வழங்கினேன்.

"உந்த கதை வசனத்தை உம்மட blog ல் வைத்து கொள்ளும்.. கதையை விட்டிட்டு, கத்தரிக்காயை சேர்த்து சாப்பிடும்" சமாதான காலத்திலும் ஆமி ஷெல்லடித்தது.

கணவாய்க் கறியும் புட்டும், நயன்தாராவும் கவர்ச்சியும் மாதிரி

யாழ்ப்பாண சமையலில் ஒரு தனித்துவமான கறி, கணவாய்க் கறி. நல்ல கொழு மொழு கணவாயை வாங்கி, திறமான உறைப்புக் கூடிய யாழ்ப்பாண கறித்தூள் போட்டு, கொஞ்சம் பிரட்டாலாக குழம்பு வைத்தால்.. அதை அடிக்க ஆளிருக்காது. தடிப்பான கறித்தூள் குழம்பில், கலாதியாக மிதக்கும் கணவாயை பார்க்கவே வாயூறத் தொடங்கும். அடுப்பில் கணவாய்க் கறி கொதிக்கும் போதே நைசா எடுத்து வாய்க்குள் போட்டு ருசி பார்த்து அம்மாட்ட ஏச்சு வாங்கிய காலமும் இருந்தது.

கணவாய்க் கறியும் இடியப்பமும் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடு மாதிரி.

கணவாய்க் கறிக்கு பொருத்தமான ஜோடி குத்தரிசி சோறு தான். சிவத்த சோற்றில், உறைப்புக் கணவாய் கறியை போட்டு, குழைத்து சாப்பிட... "என்னவென்று சொல்லுவதம்மா வஞ்சியவள் பேரழகை" பாட்டு மண்டைக்குள் கேட்கும். பாஸ்மதி, சம்பா, பொன்னி போன்ற ஹை.'.பை அரிசிகள், கணவாய்க் கறிக்கு எடுபடாது. கணவாய்க்கறியில் இருக்கும் richness ற்கு தாக்கு பிடிக்க கூடிய ஒரே அரிசி, எங்கட குத்தரிசி தான்.

கணவாய்க் கறியும் புட்டும், நயன்தாராவும் கவர்ச்சியும் மாதிரி, நல்லா ஒத்துப்போகும். அதிலும் அரிசிமா புட்டு என்றால் இன்னும் விசேஷம். கோதுமை மா புட்டோடும் கணவாய்க் கறி திறமாத்தான் இருக்கும், ஆனாலும் அரிசிமா புட்டு மாதிரி வராது. எந்த புட்டாயிருந்தாலும், புட்டும் கணவாய்க் கறியும் மிதமான சூட்டோடு இருக்கும் போது சாப்பிடோணும். ஆறினாப்பிறகு மைக்ரோவேவில் போட்டு வறட்டி எடுத்து ருசியை கெடுக்கக் கூடாது.

கணவாய்க் குழம்பில் கணவாயின் சினை மாட்டுப்பட்டால் அன்றைக்கு சனிதா வாசனாவ லொட்டரி அடித்த மாதிரித்தான். சின்ன வெள்ளை கணவாய் முட்டையை வாயில் போட்டு மெல்ல...ப்பா, நினைத்தாலே என்னவோ செய்யும்.

கணவாய்க் கறியை மண்சட்டியில் வைத்து காய்ச்சினால், அதன் சுவை இன்னொரு லெவலிற்கு போய் விடும். மத்தியானம் சோறோடு கணவாய்க்கறி விளாசிவிட்டு, இரவு புட்டுக்கும் கணவாய்க் கறி இருந்தா திறமா இருக்கும் என்று மனம் ஏங்கும். புட்டை கொஞ்சமா கையில் எடுத்து, கணவாய்க் கறி காய்ச்சிய மண்சட்டிக்குள் மிஞ்சியிருக்கும் கறியில் பிரட்டி எடுத்து சாப்பிட...நாக்கில வின் கூவும்.

கணவாய்க் கறியும் இடியப்பமும் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடு மாதிரி. எவ்வளவு குத்தி முறிஞ்சாலும் ஒத்து வராது. கணவாய்க் குழம்பு பிரட்டலா இருப்பதால் இடியப்பத்தற்கு ஒத்து வாரதில்லை என்று நினைக்கிறேன். பாண், ரொட்டி எல்லாம் கணவாய்க்கு கிட்டவும் கொண்டு வரக்கூடாது. தோசை, இட்லி எல்லாம் கணவாய்க் கறிக்கு கண்ணிலேயும் காட்ட கூடாது.

கணவாயை சாதுவாக உப்பும் தூளும் போட்டு பிரட்டி பொரித்து சாப்பிட்டாலும் நல்லாயிருக்கும். வாயில் போட்டு கஷ்டப்பட்டு கடிக்க, கணவாயிலிருக்கும் அந்த ஜுஸ் வெளிப்பட்டு நாக்கில் நர்த்தனமாடும் கணம் அலாதியானது.

07ம் பக்கத் தொடர்ச்சி

கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்

9 சேவியர்

இயேசுவின் கோபம்.

இயேசு கிறிஸ்து என்று நினைத்தவுடன் எப்படிப்பட்ட பிம்பம் நினைவுக்கு வருகிறது ? தொழுவத்தில் சிரிக்கும் பாலனா, கருணை வழியும் கண்களுடன் சாந்தமாய் நிற்கும் இளைஞனா, சிலுவையில் தொங்கும் மனிதரா ? இவற்றில் ஒன்று தான் பொதுவாகவே நமது சிந்தனையில் வரும்.
எப்போதேனும் கோபத்தில் முறைக்கும் இயேசுவின் முகம் நினைவுக்கு வருமா ? சாட்டையைப் பின்னி மக்களை ஓட ஓட விரட்டியடிக்கும் வன்முறை காட்சி நினைவுக்கு வருமா ? ரொம்ப சந்தேகம் தான். காரணம் நாம் உருவாக்கி வைத்திருக்கும் இயேசுவின் பிம்பம் அப்படி !

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு என்பது இயேசுவின் போதனைகளில் மிகவும் பிரபலமானது. அதே போல தான் "எதிரியையும் நேசி" எனும் போதனையும். அடிக்கடி தனது போதனைகளில் "கோபம் கொள்ளாதீர்கள்" என இயேசு எச்சரிக்கவும் செய்தார்.

கோபம் கொள்ளாதீர்கள் என மக்களுக்கு போதனை வழங்கிய இயேசு கோபம் கொண்டார் என்பது முரணாகத் தோன்றும். ஆனால் அவருடைய கோபத்தின் நிகழ்வுகளை சிந்திக்கும் போது எந்தெந்த இடங்களில் நாமும் கோபப்பட வேண்டும் என்பது நமக்கு புரியும்.
"சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள் பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும்." என்கிறது பைபிள். சினம் பாவத்துக்கு நம்மை அழைத்துச் செல்லக் கூடாது. அதற்காக இயேசுவின் வாழ்க்கையிலிருந்து எவையெல்லாம் சரியான கோபம், எவையெல்லாம் தவறான கோபம் என்பதை பார்போம்.

சரியான கோபம் !

1. ஏழைகளை வாட்டி வதைப்பவர்கள் மீது இயேசு கோபம் கொண்டார். அவர்களை நோக்கி தனது கோபப் பார்வையை வீசி எச்சரித்தார். ஏழைகளின் நலனுக்காக எழுகின்ற கோபம் நியாயமானது !

2. இரக்கமற்ற கடின மனங்களைக் கண்டபோது இயேசு கோபம் கொண்டார். பிறருடைய நலனுக்கும், வாழ்வுக்கும் இடைஞ்சலாக இருக்கும் இரக்கமற்ற மனநிலையின் மீது கோபம் கொள்வது நியாயமானது !
3. மனிதநேயத்தை விட, மத சட்டங்களே முக்கியம் என முரண்டுபிடிப்பவர்கள் மீதும், வெளிவேட மதவாதப் போக்கின் மீதும் இயேசு கோபம் கொண்டார். மனிதநேயத்தை மறுதலிக்கும் இடங்களில் கோபம் கொள்வது நியாயமானது !

4. கர்வம் கொண்டு நடந்தவர்கள் மீது இயேசு கோபம் கொண்டார். அத்தகைய மக்களைப் பின்பற்ற வேண்டாம் என இயேசு போதித்தார். தாழ்மைக்கு எதிராய் இருக்குமிடத்தில் எழுகின்ற கோபம் நியாயமானது.

5. இறைவனின் ஆலயத்துக்கோ, மகிமைக்கோ களங்கம் விளைவிக்கும் இடங்களில் எழுகின்ற கோபம் நியாயமானது ! ஆலயத்தை விற்பனைக் கூடமாக்கிய மக்களை இயேசு அடித்து விரட்டினார்.

தவறான கோபம்.

1. நம் மீது வைக்கப்படுகின்ற விமர்சனங்கள், கேலிகள், வன்முறைகளுக்காக கோபம் கொள்வது தவறானது. இயேசு தன்னை கிண்டல் செய்து, அடித்து, கொலை செய்தவர்கள் மீதும் கோபம் கொள்ளவில்லை.
2. தன்னைப் பிறர் புரிந்து கொள்ளவில்லையே என்பதனால் இயேசு கோபம் கொள்ளவில்லை. மனம் வருந்தினார். தன் தரப்பு நியாயம் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதற்காக கோபம் எழுவது தவறானது.
3. பிறர் என்னதான் தூண்டினாலும் கோபம் கொள்வது தவறு. இயேசுவின் பொறுமையை பரிசேயர்கள் எவ்வளவோ சோதித்தனர் எனினும் இயேசு கோபம் கொள்ளவேயில்லை.
4. இயேசுவின் கோபம் மக்களுடைய மனநிலையை மாற்றுவதற்காக மட்டுமே இருந்தது. மக்கள் மீது அவர் எப்போதும் கோபம் கொண்டிருக்கவில்லை. அவர்களை நேசித்தார். தனி மனித விரோத சிந்தனைகளோடு எழுகின்ற எந்த கோபமுமே தவறானது.
5. பாவச் செயல்களை செய்யத் தூண்டுகின்ற எந்த கோபமும் தவறானது. அது குழந்தைகளை எரிச்சலில் அடிப்பதானாலும் சரி, செல்வந்தனிடம் கொள்ளையடிப்பதானாலும் சரி !
சுருக்கமாக,
இயேசு கோபம் கொண்டார் ! ஆனால் தன் மீதான எந்த ஒரு தாக்குதலுக்கும் அவர் கோபம் கொள்ளவில்லை. ஏழைகள் ஏமாற்றப்பட்ட போதும், போலித்தனம் தலைதூக்கியபோதும், இறைவனின் தூய்மை கேள்விக் குள்ளான போதும் அவர் கோபமடைந்தார்.

நாம் கோபம் கொள்ளும் சூழல்களை சிந்தித்துப் பார்ப்போம்.
பெரும்பாலானவை நம்மையோ, நம் குடும்பத்தையோ, நமது நட்பு வட்டாரத்தையோ பாதிக்கும் விஷயங்களுக்காகவே இருக்கும் !
ஏழைகளுக்காகவோ, மனிதநேயத்துக்காகவோ எழுந்ததாய் இருக்காது !
அடுத்த முறை நம் கோபத்தை பரிசீலிப்போம்.
அது சரியான கோபமாய் இருந்தால் கூட அது நம்மைப் பாவத்துக்கு இட்டுச் செல்லாமல் கவனமாய் இருப்போம்.

கணவாய்க் கறி ஆறப்போகுது, கெதியா குளிச்சிட்டு வாரும்"

7ம் பக்கத் தொடர்ச்சி

வெள்ளைக்காரன், சால்ட் அன் பெப்பர் கலமாரி (Salt & Pepper Calamari) என்று ஒரு பதார்த்தத்தை தயாரித்து, தமிழர்களின் கணவாய் பொரியலோடு மாஸ்டர் செப்-இல் போட்டிக்கு வருவார்கள். போட்டியில் அந்த சால்ட் அன் பெப்பர் கலமாரியை எங்கட கணவாய் பொரியல் தூக்கி சாப்பிட்டு ஈசியாக வெற்றிவாகை சூடும். 90களில் வெள்ளவத்தை வாகீசன் சாப்பாடுக் கடையில் வேர்த்து விறுவிறுத்து உறைக்க உறைக்க கணவாய்க் கறி சாப்பிடுவோம். கடைசியாக கொழும்பு போனபோது "Palmyra" வில் ஏசி அறைக்குள் இருந்து கணவாய்க் கறி சாப்பிட்டோம்.
ஒஸ்ரேலியாவில் கிடைப்பது "Calamari" இல்லாட்டி "Squids". "Squids" கணவாய் போல இருக்கும் ஆனால் கணவாய் இல்லை. "Calamari" தான் எங்கட ஊர் கணவாய். கணவாயை விட அளவிலும் ருசியிலும் சிறிதான "Squids" வாங்கிக்கொண்டு போய் ஏமாந்த நாட்களும் வரலாற்றில் பதிவாகியிருக்கிறது. ஒஸி கணவாய் தாய்லாந்திலிருந்து இறக்குமதியாகிறது. தாய்லாந்து கணவாய் கொஞ்சம் மென்மையானது. எங்கட யாழ்ப்பாண கணவாய் மாதிரி தடிப்பு இல்லை. யாழ்ப்பாணத்தானின் தடிப்பு கணவாயிலும் தெரியும்.
ஒ.'.பிஸ்காரரோடு சாப்பிட போகும் போது விலாசமாக Calamari Salad-I ஓடர் பண்ணி மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் நொந்து நூடில்ஸான பொழுதையும் வரலாறு மறக்காமல் பதிவு செய்யும்.

கணவாய் கறியை சாப்பிட்டு விட்டு எவ்வளவு தான் டெட்டோல் போட்டு கழுவினாலும் அந்த கணவாய்க் கறி மணம் கையை விட்டு போகாது. சாப்பிட்டு முடிச்சாப் பிறகு, எவ்வளவு கழுவியும் மணம் போகாத அந்த கையை, யாரும் பார்காத போது, ஒருக்கா முகர்ந்து பார்த்து, கணவாய்க் கறி வாசத்தை மீண்டுமொரு முறை அனுபவித்து, தங்களுக்குள் சிரிக்காதார் யாரேனும் இந்த வையகத்துள் உண்டோ ?

கணவாய்க் கறி யாழ்ப்பாண சமையலின் மகுடம்

நோய் ஓரிடம் வலி வேறிடம்!

Dr. IN

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

பதற்றத்துடன் வந்தார் அவர். "எனக்கு ஹார்ட் அட்டக (Heart Attack) ஆக இருக்குமோ?" என்று கேட்டார்.
'ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்' என வினவினேன்.
இடது கை உளைஞ்சால் ஹார்ட் அட்டக் என நண்பன் சொன்னான். எனக்கு கொஞ்ச நாளா இடது கை உளையுது' என்றார்.

உண்மைதான்! மாரடைப்பிற்கான வலி பெரும்பாலும் நடு நெஞ்சில்தான் வந்தாலும் இடது தோள்மூட்டிற்கும், முதுகுப் புறத்திற்கும் சிலவேளைகளில் கைக்கும் பரவுவதுண்டு. கழுத்திற்கும் பரவுவது அதிகம்.

நோய் ஓரிடத்தில் இருக்க வலி மற்றோர் இடத்தில் வெளிப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் வலி எற்படும் இடத்தைப் பகுத்தறிவதில் மூளைக்கு எற்பட்ட குழப்பம்தான்.
மூளைக்குக் குழப்பம் என்றதும் மனநோயாக இருக்குமோ என நீங்கள் குழம்பிவிடாதிர்கள்.

ஆயினும் இவரது வலி நீண்ட காலமாக நீடிப்பதாலும் வியர்வை, களைப்பு போன்ற ஏனைய அறிகுறிகள் இல்லாததாலும் மாரடைப்பாக இருக்க வாய்ப்பில்லை என்பது தெரிந்தது.
மேலும் விபரமாகக் கேட்ட போது, வலி இரவில் மோசமாக இருப்பதும் வலிப்புள்ள கையில் விறைப்பு ஏற்படுவதும் தெரிய வந்தது. கழுத்தின் முண்நாண் எலும்புகள் தேய்ந்து நரம்புகளை அழுத்துவதால் ஏற்படக் கூடிய ஊநசஎனையட ளிழனெலடழளளை ஆக இருக்கலாம் என எண்ணினேன்.

"உங்கள் கழுத்து எலும்பை எக்ஸ்ரே எடுத்துப் பார்க்க வேண்டும்" என்றேன்.
"கை உளையிறதுக்கு ஏன் கழுத்தை படம் எடுக்க வேண்டும்" என அப்பாவியாகக் கேட்டார். அவர் அப்படிக் கேட்பதில் தவறில்லைத்தான்.





இடது கை உளைஞ்சால் ஹார்ட் அட்டக் என நண்பன் சொன்னான்!

கழுத்து எலும்புகள் தேய்ந்ததால், அதனூடாக வரும் நரம்புகளை அழுத்துகிறது. இதனால், அந்த நரம்பு பரவுகிற இடங்களான கையில் உளைவு, விறைப்பு போன்ற அறிகுறிகள் தோன்றும். ஆனால், நோயுள்ள இடமான கழுத்தில் அறிகுறிகள் ஏதும் இல்லாமலிருக்கலாம்.

இன்னொருவருக்கு நீண்ட நாட்களாக காதுவலி. காதுக்கு துளி மருந்துகள் விட்டுப் பார்த்தார். வலி நிவாரணிகள் சாப்பிட்டுப்பார்த்தார். எதுவும் பலனளிக்காமல் வலி மோசமான போதுதான் வைத்தியரை நாடும் எண்ணம் வந்தது. பரிசோதித்துப் பார்த்ததில் தொண்டையில் புற்றுநோய் தெரிய வந்தது.

மற்றொருவருக்கு சிறுநீரகக் குழாயில் கல் (Ureteric Calculai) ஆனால் விதையில் வலிக்கிறது என்று சொல்லி மருந்தெடுக்க வந்தார்.

பற்சொத்தைக்கு காது வலிப்பது, நாரி முண்நாண் எலும்பு நோய்க்கு காலில் வலிப்பது இப்படி நிறையச் சொல்லிக் கொண்டே போகலாம்.
நோய் ஓரிடம் இருக்க வலி இன்னொரு இடத்தில் தோன்றுவதை Reffered pain என மருத்துவத்தில் சொல்வார்கள். இதனைத் தொலைவிட வலி' என சொல்லலாம் அல்லவா?
"சூத்தில் அடிக்க பல்லுக் கொட்டுப்படுவது", "எய்தவன் இருக்க அம்பை நோவது",
"பழி ஓரிடம் பாவம் வேறிடம்", எனப் பலவாறு சொல்வது அதை ஒத்த கருத்துகள் தானே?
எனவே அறிகுறிகள் எங்கிருந்தாலும் அடிப்படை நோய் எங்கிருக்கிறது என்பதைக் கண்டறிந்து செய்வதே சிறந்த வைத்தியமாகும். நன்றி :ஹாய் நலமா

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் (allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
A.tu.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen

T.T.S.Brothers GmbH&Co.KG
உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184
Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846
Graphic design Vettimaniy Ltd

ஜரோப்பாவில் அகதிகளை ஏற்றிடும் நாடுகளில்
முன்னிலை வகிக்கும் நாடு யேர்மனி!

ஆனால் குண்டு வெடிப்புக்களால் பல நெருக்கடிகளைச் சந்திக்கிறது என்பதும் நிஜமே!

வ.சிவராஜா

"வந்தாரை வாழ வைக்கும் நல்ல நாடு ஜேர்மனி" தான் என்ற கூற்று உண்மையாக ,இருந்தாலும் ,இன்றைய நிலையில் ,இந்த நாட்டுக்குள் வந்த அகதிகளால் ,இந்த நாடே பல நெருக்கடிகளைச் சந்தித்துவருவது நிஜமாகும். அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் குண்டு வெடிப்புக்களும் பயங்கரவாத நடவடிக்கைகளும் ,இந்த நாட்டு மக்களை அகதிகள் மீது வெறுப்படைய வைத்திருப்பதும் கவலைக்குரிய விடையமாகும்.

உலகில் பல நாடுகளில் ,இடம்பெற்றுவரும் அரசியல் குழப்பங்கள், போர், உள்நாட்டுப்போர், கலவரம், பயங்கரவாத நடவடிக்கை, அணு ஆயுதப் போட்டிகள், ,இயற்கை அனர்த்தங்கள், பொருளாதார சீர்குலைவு, வறுமை, பசிபட்டினி, கொடிய நோய்கள் போன்றவற்றால் ,இன்று மக்கள் ,இடம்பெயர்வும் அகதி வாழ்வும் பெருகிய வண்ணம் ,இருப்பதாக ஐக்கியநாடுகள் சபையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.
இன்று குறிப்பாக சிரியா, பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான், லிபியா, எகிப்து, சோமாலியா, எந்தியோப்பியா, கென்யா, ஈரான், ஈராக், துருக்கி போன்ற நாடுகளில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மையால் கோடிக்கணக்கான மக்கள் தமது சொந்த நாட்டுக்குள்ளும் வெளிநாடுகளிலும் அகதிகளாக ,இடம்பெயர்ந்து வாழவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இன்னும் பலர் பொருளாதார அகதிகளாகவும் இடம்பெயர்வுகளைச் சந்தித்து வருகிறார்கள்.

குறிப்பாக ஜரோப்பா நாடுகளை நோக்கிப் படை எடுக்கும் அகதிகள் பெருவாரியானோர் ஜேர்மனி நாட்டை நோக்கியே வந்து சேர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அகதிகளை ஏற்றுக்கொள்ளும் நாடுகளில் அதாவது ஜரோப்பாவில் ஜேர்மனி நாடுதான் முன்னிலை வகிப்பதாகத் தெரிய வந்துள்ளது. பசிபட்டினியோடு உயிராபத்துக்களைச் சந்தித்து வரும் அகதி களாகவரும் பல நாடுகளின் அகதிகளுக்குத் தஞ்சம் அளித்து பாதுகாப்புக் கொடுத்து, உணவு, மருத்துவம், கல்வி, பணம் போன்ற பல சேவைகளை வழங்கிப் பிற நாட்டவர்களை வாழ வைக்கும் நாடுகளில் இன்று முதன்மை வகிக்கும் நாடு ஜேர்மனிதான். ஜேர்மனிய மக்களின் மனித நேயத்தை நாம் பாராட்டியே ஆகவேண்டும்.

இந்த நாட்டுக்குவரும் அகதிகள் மிகவும் உயிராபத்துக்கள் நிறைந்த கடற்பிரயாணம், எல்லைகளைக் கடத்தல், பனி குளிர் எனக்காடுகள் அனைத்தும் தாண்டித்தான் சொல்லொணாத் துயர்களைச் சந்தித்து அனுபவித்தே வந்துசேருகிறார்கள்.
அப்படிவரும் மக்களில் ஒருசிலர் செய்யும் பயங்கரவாத நடவடிக்கைகள் ஜேர்மனிய மக்களை அச்சம் கொள்ளவும் வெறுப்புக்கொள்ளவும் வைக்கின்றன என்றேகூறவேண்டும். இந்த வெறுப்புணர்வுகளால் எதிர்காலத்தில் பல விளைவுகள் நெருக்கடிகள் அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்தும் எனக் கருதப்படுகின்றது.

இன்று உலகில் பல நாடுகளில் இடம்பெயர்வும், அகதி வாழ்வும் நீடித்து நிலைத்துவிட்டன. ஏன் எங்கள் தாயகத்தில் நடந்து முடிந்த இன வன் முறைகளால் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறமுடியாமல் இன்னல்படுகிறார்கள். அந்த அளவுக்கு நம் நாட்டின் அரசியல் குழப்பங்கள் தொடர்கதையாக நீடித்துவருகின்றன.
இன்று இப்படியாக இடம்பெறும் அனர்த்தங்களால் உலகிலேயே மிகப்பெரிய அகதிகள் முகாம் கென்யா நாட்டில் காணப்படுவதாகவும் இங்கு சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் ஓரிடத்தில் வசிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது. இந்த வகையில் ஜேர்மனியில் அகதிகள் பற்றிய சிறு புள்ளி விபரங்களைப் பார்ப்போம்...

2015ம் ஆண்டில் நாட்டுக்குள் வந்த அகதிமக்கள் -8.90.000 பேர்
2016 ஆண்டில் நாட்டுக்குள் வந்த அகதிமக்கள -2.80.000 பேர்
2015ம் ஆண்டில் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் - 4.70.000 பேர்
2016 ஆண்டில் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் - 7.46.000 பேர்
2015,2016 ஆண்டுகளில் ஆகக்கூடுதலாக வந்த அகதிகளின் எண்ணிக்கை 1.000 பேருக்கு என்ற அடிப்படையில் தற்காலிக வதிவிட அனுமதி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை..

சிரியா நாட்டவர்கள்	1.000 பேருக்கு	- 632 பேர்
ஆப்கானிஸ்தான் நாட்டவர்கள்	1.000 பேருக்கு	- 798 பேர்
ஈராக் நாட்டவர்கள்	1.000 பேருக்கு	- 463 பேர்
ஈரான் நாட்டவர்கள்	1.000 பேருக்கு	- 528 பேர்
எரித்திரியா நாட்டவர்கள்	1.000 பேருக்கு	- 248 பேர்

இந்த நாட்டுக்குள் அகதிகளாக வந்து அகதி அந்தஸ்த்துக் கோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை ஜேர்மனிய அதிகாரிகள் அகதி அந்தஸ்த்து வழங்குவதற்கு எடுக்கும் காலம் 2 3 மாதங்களாகும்.
-2016ம் ஆண்டு ஜேர்மனிக்குள் அகதிகளாக வந்தவர்களில்..

சிறுவர்கள் - 26 வீதம்பேர்
பெண்கள் - 17 வீதம்பேர்
ஆண்கள் - 57 வீதம்பேர்

2016ம் ஆண்டு முடிவடைய ஜேர்மனியில் ஆகக்கூடிய அகதிகள் வரிசையில்

துருக்கி நாட்டவர்கள்	- 2.5 மில்லியன்பேர்	(25 லட்சம்)
பாக்கிஸ்தான் நாட்டவர்கள்	- 1.6 "	(16 லட்சம்)
லெபனான் நாட்டவர்கள்	- 1.1 "	(11 லட்சம்)
ஈரான் நாட்டவர்கள்	- 1.0 "	(10 லட்சம்)

தொடர்ச்சி 24ம் பக்கம்



வேஷங்கள்

சந்திரவதனா





காலைப் பொழுதுக்கே உரிய அவசரத்துடன் ஜேர்மனியின் கிராமங்களில் ஒன்றான அச் சிறு கிராமத்து வீதி இயங்கிக் கொண்டிருந்தது. கோடை என்றாலும் குளிர்ச்சியான காலை. பச்சையாய், பசுமையாய் மரங்களும், பூக்களுமாய் ஜேர்மனி அழகாகத்தான் இருந்தது. சிக்னலுக்காக காரில் காத்துக் கொண்டிருந்த உமாவின் மனது மட்டும் அந்தக் காலைக்குச் சிறிதும் பொருந்தாது புழுங்கிக் கொண்டிருந்தது. கோபத்தில் தகித்தது என்று கூடச் சொல்லலாம்.
எப்படி அவனால் முடிந்தது! எப்படித் துணிந்து சொன்னான்? காலையில் சந்துரு சொன்ன செய்தியில் கொதிப்படைந்த அவள் கோபத்தை அக்சிலேட்டரில் காட்டினாள்.

சந்துரு வேறு யாருமல்ல. அவள் கணவன்தான். 15வருட தாம்பத்திய வாழ்க்கை. அன்புக்குச் சின்னமாக நிலாவினி, அவர்களின் செல்ல மகள்.

நேற்று இரவுவரை அன்பாகத்தானே இருந்தான்! நடித்தானா..? காலையில் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுவான் என அவள் கனவில் கூட நினைக்கவில்லை.
"உமா, உம்மோடை நான் கொஞ்சம் கதைக்கோணும்." காலையில் தேநீருடன் சென்ற உமா, படுக்கையிலிருந்த அவனை எழுப்பிய போது குழைந்தான்.
அவனது வார்த்தையின் பரிவில் நெகிழ்ந்து, அப்படியே அவனருகில் கட்டில் நுனியில் அமர்ந்து, அவன் மார்பின் சுருண்ட கேசங்களைக் கோதிய படி "சொல்லுங்கோ" என்றாள் மிக அன்பாக.
"நீர், அழக் கூடாது."
"சும்மா சொல்லுங்கோ."
சில கணங்கள் நிதானித்து "உமா, நான் இண்டையிலையிருந்து முன்சனில் தங்கப் போறன்."
"ஏன்..?" மிகவும் திடுக்கிட்டவளாய்.
"ஒவ்வொரு நாளும் பயணம் செய்யிறது சரியான கஸ்டமாயிருக்கு."
"இவ்வளவு நாளும் செய்தனிங்கள்தானே! இப்ப மட்டும் என்ன வந்தது?"
"பார்த்தீரே! இப்பவே ரென்சன் ஆகிறீர். நான் இன்னும் விசயத்துக்கே வரேல்லை."
"....." சந்துருவின் புதிருக்கு மௌனமாக தனக்குள் விடை தேடினாள்.
"உமா, உமக்குத் தெரியுந்தானே என்னோடை அந்தச் சக்கி எண்ட செக்கொஸ்லாவியப் பொம்பிளை வேலை செய்யிறது?"
"ஓமோம். புருசன்காரன் விட்டிட்டுப் போயிட்டான் எண்டு சொன்னனிங்கள். அவள்தானே, பாவம்... அவளின்ரை மகன் எப்பிடி இருக்கிறான்?"
"அது வந்து... உமா, அவளின்ரை மகன் சரியான சுகமில்லாமல் இருக்கிறான். அவளுக்கு என்ரை உதவி தேவைப் படுது. அதுதான் என்னை வந்து..."
"வந்து..."
"தன்னோடை இருக்கச் சொல்லிக் கேட்கிறாள்."
"அதுக்கு..!""அதுதான் அவளோடை போய் கொஞ்ச நாளைக்கு இருப்பமெண்டு தீர்மானிச்சிருக்கிறன்."

விக்கித்துப் போன உமா விருட்டென்று கட்டிலில் இருந்து எழுந்து விட்டாள். ஒரு கணம் துடிக்க மறந்த அவளது இதயம் மீண்டும் அவசரமாகத் துடிக்கத் தொடங்கியது. வார்த்தைகள் வெளி வர மறுத்தன.

"யோசிக்காதையும். நான் உம்மட்டையும் வந்து வந்து போவன். உமக்கென்ன குறை இஞ்சை இருக்கு. ஊரிலை போலை அடுப்பை ஊதி... உடுப்பைக் கல்லிலை அடிச்சுத் தோய்ச்சு... இப்பிடி ஒரு கஸ்டமும் இல்லைத்தானே... எல்லா வசதியளும் இருக்குத்தானே."

"இதெல்லாம் நீங்களாகுமோ? நீங்கள் அவளை விரும்பிறிங்களோ?"

"இல்லை... இல்லை... அவள்தான் என்னை உயிருக்குயிராய் விரும்புறாள். நான் இல்லையெண்டால் அவளுக்கு ஒரு துணையும் இல்லை."

"நானும் அம்மா, அப்பா, சகோதரங்களையெல்லாம் விட்டிட்டு வந்திருக்கிறன். இந்தப் பெரிய ஜேர்மனியிலை உங்களையும், நிலாவினியையும் விட்டால் எனக்கும் வேறை ஆர் இருக்கினம்?" இப்போது அவளிடம் அழுகை பொங்கியது.

"ஏன் இப்ப அழுறீர்? நான் உம்மட்டையும் வருவன்தானே. நீர் படிச்ச பொம்பிளை, இதை அனுசரிச்சுப் போகோணும். ஊருலகத்திலை நடக்காத விசயமே இது!"

"நோ... என்னாலை ஒரு நாளும் இதுக்கு ஒப்புக் கொள்ளேலாது."

உமா கோபமாக முன்னேறி மூர்க்கத்தனமாக அவனது மார்பில் குத்தினாள். நுள்ளினாள். முகமெல்லாம் பிறாண்டினாள். அவன் அவளைத் தள்ளி விட்டு "பொம்பிளை மாதிரி நடந்து
கொள்ளும்." என்று கத்தினான்.

அவனது இடது கன்னத்தில் இவளது நகம் பட்டு இரத்தம் துளிர்த்து நின்றது. வலியோடு அதைத் தடவியவன் கையில் பட்ட இரத்தத்தை அவளிடம் காட்டி, "இங்கை பாரும் எனக்கு இரத்தக் காயம் வர்ற அளவுக்கு பிறாண்டியிருக்கிறீர். இதுக்கு மேலை என்னைத் தொட்டீரோ... நடக்கிறது வேறை. நானும் சும்மா இருக்க மாட்டன். என்ரை முடிவு முடிவாகீட்டுது. ஒத்துப் போனீர் எண்டால் உமக்கும் நல்லது. எனக்கும் நல்லது. நிலாவினிக்கும் நல்லது. இல்லாட்டி நீர்தான் கஸ்டப் படுவீர். நிலாவினிக்கு இதொண்டும் தெரியத் தேவையில்லை."

உமாவுக்கு மலைப்பாக இருந்தது. தனது மூர்க்கத் தனமான செய்கையில் எரிச்சலாகவும், வெட்கமாகவும் இருந்தது. என்னவெல்லாம் இவன் சொல்கிறான் என்று கலக்கமாகவும் இருந்தது. சக்கியைப் பற்றி சந்துரு ஏற்கெனவே சொல்லியிருக்கிறான்.

தொடர்ச்சி 12ம் பக்கம்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

வேஷங்கள்

அவளுக்காக உமாவும் பரிதாபப் பட்டிருக்கிறாள். அதுக்காக சந்துருவே போய் சக்கிக்கு வாழ்க்கை கொடுப்பதென்பது எந்த வகையில் நியாயமானது? இவன் சொல்வதெல்லாம் உண்மைதானா அல்லது தன்னைச் சீண்டி விட்டு வேடிக்கை பார்க்கிறானா, என்று குழம்பினாள்.

நிலாவினியும் வீட்டில் இல்லை. பாடசாலையோடு 'ரூர்' என்று போய் விட்டாள். திரும்பி வர இன்னும் எட்டு நாட்களாகும்.

"நீங்கள், சும்மா பகிடிக்குத்தானே சொல்லுறிங்கள்..?" ஒரு நப்பாசையோடு கேட்டாள். "இல்லை உமா. சீரியஸாத்தான் சொல்லுறன். எனக்கு உம்மையும் விருப்பந்தான். ஆனால் இப்ப சக்கிக்கு என்ரை உதவி தேவை."

இயலாமை என்ற ஒன்று இப்போ உமாவை ஆக்கிரமித்தது. "ஓ..." வென்று குழறினாள்."ஏனப்பா, இப்பிடிக் குழறுறீர்? பக்கத்து வீட்டுச் சனத்துக்கெல்லாம் கேட்கப் போகுது. என்ன நினைக்குங்குள். ஊரெண்டு நினைச்சீரே. ஏதோ மூண்டாந்தரக் குடும்பங்கள் மாதிரிக் கத்திறீர்!"

"ஆர் என்ன நினைச்சாலும் எனக்குப் பரவாயில்லை. நீங்கள் செய்யத் துணிஞ்சது மட்டும் முதலாந்தரமா இருக்கோ?"

வார்த்தைகள் மிகச் சூடாக, அநாகரிகமாக நீண்டு... ஒன்றோடொன்று மோதி.. உமாவுக்கு, சந்துரு முரட்டுத்தனமாக அடிக்க, உமா தன்னைக் காத்துக் கொள்ள எண்ணி, இழுத்துப் பறித்து கதவில் இருந்த திறப்பையும் இழுத்து எடுத்துக் கொண்டு வெளியில் ஓடினாள்.

கொஞ்ச நேரம் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றவள், காரையும் எடுத்துக் கொண்டு இலக்குத் தெரியாமல் ஓடி.. சிவப்பு லைற்றில் தரித்து நின்றாள். சிக்னல் பச்சையாக, பின்னிருந்த காரோட்டி கோன் அடித்து "தூங்குகிறாயா?" என்று சைகை காட்டிச் சினக்க, சிந்தனையிலிருந்து தற்காலிகமாக விடுபட்டு, மீண்டும் பலம் கொண்ட மட்டும் அக்சிலேட்டரை அழுத்தி, சீறிக் கொண்டு பறந்தாள்.

ஒரு பாடசாலையின் முன் ஒரு குழந்தை வீதியைக் கடப்பதைக் கடைசி செக்கனில் கண்டு அவசரமாக பிறேக்கை அழுத்தினாள். 'கடவுளே..! நான் என்ன செய்கிறேன். அந்தப் பிள்ளை அடிபட்டிருந்தால்..!' முனகினாள். அப்படியே போனவள் வழியில் உள்ள மைக்கல் தேவாலயத்தின் அருகில், காரை நிறுத்தி விட்டு தேவாலயத்துக்கான படிகளில் ஏறி ஓரிடத்தில் அமர்ந்தாள். அடக்க முடியாமல் அழுதாள். திடீரென்று நிர்க்கதியாகப் போய் விட்டது போல உணர்ந்தாள். பைத்தியம் பிடித்தவள் போல அரற்றினாள். யோசிக்க முடியாமல் மூளைப்பகுதி நொந்தது. கண்களின் முன்னே மெல்லிய புகைமண்டலம் போல எதுவோ மறைத்தது. எதையும் சரியாகச் சிந்திக்க முடியாமல் திண்டாடினாள்.

சந்துருவுக்கும், அவளுக்கும் இடையில் அடிக்கடி சின்னச் சின்னச் சண்டைகள், சச்சரவுகள் என்று வரத் தவறுவதில்லைத்தான். சண்டைகள், கருத்து வேறுபாடுகள் இல்லாத குடும்பங்களா? சில சமயங்களில் சந்துருவின் மேல் சந்தேகங்களும் வந்து பொங்கியிருக்கிறாள்தான். அவையும் சந்துரு கூறும் பொய்ச் சமாதானங்களில் பொங்கிய வேகத்தில் அடங்கியும் போயிருக்கின்றன. ஆனால் இந்தளவுக்கு தன்னை அப்படியே விட்டு விட்டுப் போய் இன்னொருத்தியுடன் வாழத் துணிந்த அவன் துணிவும், அதை மிகச் சாதாரண விடயம் போல அவள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவன் வேண்டுகோளும், அவளை நிலைகுலைத்து விட்டன. தன்னவன் இன்னொருத்திக்குச் சொந்தம் என்று தெரிந்தால் எந்தப் பெண்ணால்தான் நிலைகுலையாமல் இருக்க முடியும்.தேவாலயம் உயர்ந்து கம்பீரமாக நின்றது. உல்லாசப் பிரயாணிகள் உள்ளே சென்று அதன் உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்தார்கள். சிலர் உச்சியில் நின்று நகரின் அழகை ரசித்துக் கொண்டிருந்தார்கள். இவளுக்கும் ஒரு விபரீத ஆசை வந்தது. தானும் போய் ஏறினாள். அதிக எண்ணிக்கையான வளைந்து வளைந்து செல்லும் படிகளில், ஒவ்வொன்றாக ஏறும் போது மனச்சோர்வுடன் உடற் சோர்வும் சேர்ந்து கால்கள் தடுமாறின. தலை சுற்றியது. ஆனாலும் ஏறி விட்டாள். மூச்சு வாங்கியது. மேலே நின்று பார்த்தாள். எதுவும் தெளிவில்லாமல் ஏதோ ஒரு மெல்லிய புகைமண்டலம் முன்னே தெரிந்தது. பச்சை மரங்கள் கூட புகை போர்த்தி வெண்மை பேர்ந்த பச்சைகளாகத் தெரிந்தன. யாரும் எதிர் பார்க்காத ஒரு கணத்தில் எம்பிக் குதித்தாள். அங்கு நின்ற எல்லோருமே அதிர்ச்சியில் அவலக்குரல் எழுப்ப, அவள் இரத்தமும், சதையுமாய் தேவாலயத்தின் படிகளில் சிதறினாள். ஒரு கணம் ஸ்தம்பித்து நின்ற அந்த இடத்தை பொலிஸ் வாகனங்களும், அம்புலன்ஸ் வண்டியும் அல்லோல கல்லோலப் படுத்தின. சிவப்பும், வெள்ளையும் கலந்த தடுப்பு நாடாக்கள் கட்டப்பட்டு அந்த வீதியிலான போக்குவரத்துக்களும், மக்கள் நடமாட்டமும் தடைப்படுத்தப் பட்டது. இது மூன்றாவது சாவு. முதலில் 14வயது நிரம்பிய ஒரு ஜேர்மனிய மாணவி. அடுத்து ஒரு இந்தியத் தமிழ்ப்பெண். இப்போ இலங்கைத் தமிழ்ப்பெண். 'தேவாலய உச்சிக்கு இனி யாருமே ஏற முடியாது' என்ற அறிவித்தலோடு தேவாலயத்தினுள்ளே இருந்த உச்சிக்கு ஏறும் படிகளை மறித்து கேற் போட்டு, பெரிய மாங்காய்ப்பூட்டு போடப் பட்டது.

விசாரணைகள் தொடர்ந்து... சாக்கில் கட்டப் பட்ட உமாவின் உடல் என்று சொல்லப் பட்ட சதைப்பிண்டம் அடக்கம் செய்யப்பட்டு இரண்டு கிழமைகள் ஓடி விட்டன. சந்துருவைத் துக்கம் விசாரிக்க உறவினர்கள் என்ற பெயரில் சிலரும், நண்பர்களும் வந்து வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

சந்துரு சோகமாய், தாடியை மழிக்காமல் தேவதாஸ் வேடம் போட்டிருந்தான். யார் வீட்டுக்கு வந்தாலும் ஒரு சோகப் பாட்டுள்ள இசைத்தட்டைச் சுழல விட்டு தன் சோகத்தை இன்னும் பலமாக மற்றவர்களுக்குக் காட்டினான்.

அழுவாரைப் போல இருந்து "அவ பாருங்கோ சரியான நல்லவ. ஆனால் ஜேர்மனியிலை இருக்கிற எல்லாப் பொம்பிளையளுக்கும் உள்ள அதே பிரச்சனைதான் அவவுக்கும். தனிமைதான் எல்லாத்துக்கும் காரணம். தாய் தகப்பன் ஊரிலை. சொந்தம் எண்டு சொல்லிக் கொள்ள ஒருவரும் பக்கத்திலை இல்லை. நானும் வேலையோடை. மகள் நிலாவினி பள்ளிக்கூடம், ரூர் எண்டு திரிவாள். இவ நாள் முழுக்க வீட்டிலை தனியத்தானே. அதுதான் அவவுக்கு சரியான மனஅழுத்தம். எப்பவும் சும்மா இருந்து அழுறதும்..." அலுக்காமல் சலிக்காமல் சொல்லிக் கொண்டே இருந்தான்.

மரணத்தின் முன்பே ஒத்திகை பார்க்கும் தைரியம்!

மகாராணியார் இறந்தால் மரணச்சடங்கிற்கான குறியீட்டுப்பெயர்.

லண்டன் பாலம் வீழ்ந்தது!

லண்டன் பாலம் வீழ்ந்தது. இது மகாராணியாரின் மரணச்சடங்கிற்காபன குறியீட்டுப்பெயர்.
எலிசபெத் மகாராணியாரின் 91வது பிறந்த நாள் கடந்த 21.04.2017 இல் கொண்டாடினார்.அத்துடன் பல்வேறு அமைப்புகள், சேவை நிறுவனங்களின் போசகர் பதவிகளிலிருந்து தாம் விரைவில் விலகப் போவதாக அவர் அறிவித்துள்ளார்.

மிகவும் ஆரோக்கியமாக வாழ்ந்துவரும் எலிசபெத் மகாராணியார் திடீரென மரணத்தைத் தழுவினால் அவரது ,இறுதிச் சடங்கை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பான உயர்மட்டத் திட்டமொன்று பக்கிங்ஹாம் அரண்மனையில் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி அவரது மரணச் செய்தியை அறிவிப்பதற்கான குறியீட்டுச் சொல்லாக 'லண்டன் பாலம் விழுந்தது' (லண்டன் பிரிட்ஜ் ,ஸ் டவுண்) என்ற சொல் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மிகவும் உயர்மட்டத்திலிருக்கும் தலைவர்களுக்கு இந்த குறியீட்டுச் சொல்லின் மூலமாகவே மகாராணியின் மரணச் செய்தி அறிவிக்கப்படும். அரண்மனையின் சிவில் சேவகர் ஒருவரால் இந்தக் குறியீட்டுச் சொல் அறிவித்தல் முதலில் லண்டன் பிரதமருக்கு அறிவிக்கப்படும்.

இவரது இறுதிச் சடங்குக்கு ஒப்பிரேஷன் லண்டன் பிரிட்ஜ் என்று பெயர் சூட்டப்படும். எலிசபெத் மகாராணி அரச தலைவராக ,இருக்கும் பதினைந்து நாடுகளுக்கு அடுத்து உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும். இதற்கு அடுத்ததாக அவர் தலைமை வகிக்கும் பொதுநலவாய அமைப்பின் அங்கத்துவ நாடுகளுக்கு இச்செய்தி தெரிவிக்கப்படும்.

இதுவரை காலமும் அரச குடும்பத்தவர்கள் மரணம் தொடர்பான செய்தி பிபிசி நிறுவனத்துக்கு மாத்திரமே வழங்கப்படும் மரபு பேணப்பட்டு வந்தது. ஆனால் மகாராணியின் மரணம் தொடர்பான செய்தி இந்த மரபிலிருந்து மாற்றப்பட்டு சகல ஊடகங்களுக்கும் சமநேரத்தில் வழங்கப்படும். மரணம் நிகழ்ந்த மிகக் குறுகிய நேரத்தில் அச்செய்தி வெளிவரும் வகையில் ஏற்பாடாகியுள்ளது.

அஞ்சலி செலுத்தும் சீருடை அணிந்த காலாட்படை வீரர் ஒருவர் பக்கிங்ஹாம் அரண்மனையின் வெளிப்புறத்தின்
நுழைவாயிலில் இந்த மரணச் செய்தி அறிவித்தலை காட்சிப்படுத்துவார்.
அதேசமயம் அரண்மனையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் கடுமையான நிறத்திலான பின்னணியுடன் ஒரு பக்கத்தில் மரணச் செய்தியை வெளியிடும்.
இறுதிக் கிரியைகள் மற்றும் இறுதி ஊர்வலம் தொடர்பான செய்தி சேகரிப்பு தொடர்பாக உடனடியாகவே அறிவித்தல்கள் விடுக்கப்படும்.

பிபிசியின் வானலை எச்சரிக்கை பரிமாற்றம் முறைமையை உடனடியாகச் செயற்படுத்தி மகாராணியின் மரணத்துக்கான ஒத்திகைகளை நடைமுறைப்படுத்தும்.

பல்வேறு ஊடகங்களுடன் பிரத்தியேக நேர்காணல்களை அல்லது கருத்துகளை வழங்குவதற்காக அரண்மனையைச்
சேர்ந்த நிபுணர்கள் பல்வேறு ஊடக நிறுவனங்களுடன் ஏற்கனவே ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.
மகாராணியாரின் மரணத்துக்கு கிட்டத்தட்ட பத்து நாட்கள் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் வர்த்தக வானொலிச் சேவைகள் அனைத்தும் இச்செய்தி தொடர்பாக தமது அறிவிப்பாளர்களுக்கு தகவல்
வழங்குவதற்காக நீல நிறத்திலான மின்குமிழ்களை ஒளிர விடுவார்கள். அதன்பின் மரணச் செய்தியினை வாசிப்பார்கள்.
தொடர்ந்து சகல வானொலிச் சேவைகளிலும் அமைதியான இசை ஒலிபரப் பப்படும். சகல ஊடகங்களிலும் சர்வதேச ரீதியாக இச்செய்தி சில வாரங் களுக்கு நீடித்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
அரண்மனையில் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் பொதுமக்கள் அஞ்சலி செலுத்து வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
மகாராணியார் வெளிநாடு ஒன்றில் மரணமடைந்தால் அரச குடும்பத்துக்கான பிரத்தியேக விமானம் அவரது உடல்
வைக்கப்பட வேண்டிய பேழையுடன் பிரிட்டனிலிருந்து அந்த நாட்டுக்குச் செல்லும். அதேசமயம் சன்றிங்ஹாமில் அவர்
மரணமடைந்தால் கார் மூலம் அவரது உடல் அரண்மனைக்குக் கொண்டு செடல்லப்படும்.

அவரது உடல் தாங்கிய பேழையுடன் புனித கைல்ஸ் தேவாலயத்தில் திருப்பலி கொடுக்கப்பட்டு வீதிதோறும் பொதுமக்கள் நின்று மலரஞ்சலி செலுத்த, அரண்மனையில் முடிக்குரிய அறைக்கு உடல் கொண்டு செல்லப்படும். அவ்வேளையில் நாடளாவிய ரீதியில் சகல கொடிகளும் இறக்கப்பட்டு மணிகள் ஒலிக்கப்படும்.

மரணத்தின் பின்னரான முதலாவது நாள் புதிய மன்னரின் பெயர் அறிவிக் கப்படும். இறுதி ஊர்வலமானது பத்தாம் நாள் நடைபெறுவதற்கு முன்னதாக மகாராணியார் அணிந்திருக்கும் சகல நகைகளும் அவரது உடலிலிருந்து கழற்றப்பட்டு உடல் தாங்கிய பேழை சுத்தம் செய்யப்படும். இறுதி ஊர்வலம் நடைபெறும் பத்தாம் நாளில் காலை 9 மணிக்கு லண்டன் கோபுரத்தில் இருக்கும் மணி ஒலிக்கப்படும்.

பின்னர் வெஸ்ற்மென்ஸ்டர் சபைக்கு உடல் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து , இறுதி ஊர்வலம் ஆரம்பமாகும்.
23 மைல் தரை மார்க்கமாக அவரது உடல் அரச குடும்பத்தவர்களின் உடல்கள் புதைக்கப்படும் வின்சர் கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு குடும்பத்தவர்கள் அஞ்சலி செலுத்துவார்கள். அதனைத் தொடர்ந்து புதிதாக மன்னராக பட்டம் சூட்டப்பட்டவர் சில்வர் பாத்திரமொன்றிலிருந்து கை நிறைய சிவப்பு மண்ணை எடுத்து மகாராணியாரின் உடற்பேழையின்மீது தூவுவார்.
மகாராணியாரின் மரண ஒத்திகை தொடர்பான ,இந்தச் செய்தியினை லண்டன் கார்டியன் பத்திரிகை வெளியிட்டது.
அதன்பின்னர் பிரிட்டனின் படல்வேறு ஊடகங்களும் .இதனை மறுபிரசுரம் செய்தன.
குறிப்பு: ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் மரணச் செய்திக்கான குறியீட்டுச் சொடலாக 'ஹைட் பார்க் கோணர்' என்ற சொற்பதம் பயன்படுத்தப் பட்டிருந்தது குறிப்பிடப்பட வேண்டியது. நன்றி தமிழர் தகவல்(கனடா)

Essen மாநகரில் மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்
APIRAAMI ENTERPRISE
இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும்
கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும்
அபிராமி என்டர்பிறைஸ்
இதோ!!! குறித பண மாற்றுச் சேவை!
Ria
VALUTRANS
Pferdemarkt 9 45127 ESSEN Tel.: 0201/236925

சிவகாமி மனவறைச் சோடினை
யோகன், யோகி:
02823/6838
Mobil:
152 138 22 350
Yogan Deko

Warendorf மாவட்டத்தில்

மாபெரும் அங்காடி

M point Supermarkt

எமது முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பணை!

12-13 May 2017

என்றுமில்லாத அதிரடி மலிவு விலை!
பொருட்களின் விபரமறிய
எமது இணையத்தளத்தைப் பார்வையிடவும்

www.mpointmarkt.de
Facebook:M-Point Supermarkt

12-13 May
2 day Sale
friday & saturday

1st YEAR ANNIVERSARY

உடனுக்கு உடன் இறக்குமதி
செய்யப்பட்ட
மரக்கறிவகைகள்
கடல் உணவு வகைகள்,
மற்றும் மளிகைப்
பொருட்களுக்கும்
எம்மை நாடுங்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

துரித பணமாற்றுச் சேவை!
எம்மை நாடுங்கள்!!

VALUTRANS
MONEY TRANSFER

M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf)

Möbil:0179 48 555 54
Tel: 02583 30 30 300
Email : shansure7480@yahoo.de

அனைவருக்கும் எங்கள் உழைப்பாளர்தின வாழ்த்துக்கள்

நூலகவியலாளர் என்.செல்வராஜாவுக்கு பிரித்தானிய IPRA விருது!

நூலகவியலாளர் திரு.என் செல்வராஜா அவர்களின் இந்த வரலாற்றுப் பணிக்கு கிடைத்த விருது கண்டு வெற்றிமணி மனமார வாழ்த்துகின்றது.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு சேவையாற்றும் நூலக சேவையாளர் களுக்கான சிறப்பு விருதான 2017க்கான IPRA விருது (Informed Peer Recognition Award) நூலகவியலாளர் என்.செல்வராஜாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் தமது நூலகத்துறைசார் பணி களுக்கப்பால் தாம் சார்ந்தசமூகத்துக்காக, சுயநலமற்ற சேவையாற்றும் மூன்று நூலகர்களுக்கு இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்படுவதுண்டு.

பிரித்தானியாவில் 1992 முதல் புலம்பெயர்ந்து குடும்பத்தினருடன் வாழும் திரு. செல்வராஜா, ஈழத்தமிழரின் தேசிய நூற்பட்டியலாகக் கருதப்படும் 'நூல்தேட்டம்" தொகுதிகளின் வாயிலாக ,இதுவரை 11,000 ஈழத்துத் தமிழ்நூல்களை குறிப்புரையுடன் பதிவு செய்துவந்துள்ளார். இதன்மூலம் ஈழத்துப் படைப் பாளிகளை அவர்களே அறிந்திராத நிலையில்கூட அவர்களது படைப்புகளை உலகெங்கிலுமுள்ள ஆய்வாளர்கள் அறிந்து ஆய்வுக் குட்படுத்தும் வகையில் வசதிகளைத்தன் சொந்த முயற்சியில் மேற்கொண்டு வந்துள்ளார். போரின் வலிகளைத் தாங்கி நிற்கும் ஒரு இனத்தின் அழிந்துவரும் ஆவணங்களை முடிந்தவரை தேடிச் சேகரித்துப் பதிந்து வரலாற்றில் ,இடம்பெறச் செய்யும் பணியினை சிறப்புற ஆற்றுகின்றார்.

இந்தவகையில் லண்டனில் ஒரு ஆவணக்காப்பகத்தை பிரித்தானிய அரசசார்பற்ற அமையமாகப் பதிவுசெய்து அதன் ஸ்தாபக ,இயக்குநராகச் செயற்பட்டு ஈழத்தமிழர் பற்றியும், ஈழத்தமிழ் ,இலக்கியங்கள் பற்றியும், தமிழரல்லாத புத்திஜீவிகளும் அறிந்து ஆய்வுசெய்யும் வகையில் அதனை ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும் (ETDRC) என்ற பெயரில் பிரித்தானிய தொண்டு நிறுவனமாகப் பதிவுசெய்து இயக்கிவருகின்றார்.

கனடா தமிழர் வரலாறு – நூல் வெளியீடு

சென்ற மாதம் கனடாவில் இகுருவி வருடாந்த விழாவில் இகுருவி இதழின் எழுத்தாளர் குரு அரவிந்தன் எழுதிய 'கனடா தமிழர் வரலாறு' (Canadian Tamils' History) என்ற தொடர் கட்டுரைகளின் தொகுப்பு, நூல் வடிவமாக வெளியி டப்பட்டது.

இந்த இகுருவி விழாவில் இந்தியாவில் இருந்து பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன், இலங்கையில் இருந்து சின்னத்தம்பி குணசீலன் ஆசிரியர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

குரு அரவிந்தனின் 'கனடா தமிழர் வரலாறு' நூல் வெளியிடப்பட்ட போது சிறப்புப் பிரதிகளைப் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, ரொறன்ரோ நகராட்சி மன்ற உறுப்பினர் நீதன் சண் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

ஆங்கிலத்திலும், தமிழ் மொழியிலும் வெளிவந்த இந்த நூலில் குரு அரவிந்தனனின் 'பிறீடம் இஸ் பிறி இன் கனடா' (Freedon is Free in Canada) என்ற கட்டுரையும் இடம் பெற்றிருந்தது. கனடாவின் 150 வது பிறந்த தினத்தை 2017 இல் கொண்டாடும் கனடிய அரசு பல்கலாச்சார சமூகங்களிடையே இருந்து தெரிவு செய்யப்பட்ட கதைகளில் தமிழ் சமூகத்தைப் பிரதிபலிக்கும் குரு அரவிந்தனின் கதையும் 150 கதைகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப் பட்டிருந்தது.

150 வது பிறந்த தினத்தைக் கனடிய அரசுகொண்டாடும் இந்த வேளையில் தமிழர்களின் புலம் பெயர்ந்த வரலாற்றை, அவர்களின் கடந்த 40 வருடகால பங்களிப்பைப் பற்றிய தகவல்கள் இந்த நூலில் முடிந்த அளவு இடம் பெறற்றிருக்கின்றன.

மங்கல இசைக் குழு

நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman

Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236

Mob: 0049 157 89 15 95 71

யேர்மனி டோட்முண்ட் நகரில் தமிழ்மொழித்திருவிழா 2017

01.4.17 அன்று டோட்முண்ட் மாநகரில் தமிழ்மொழித் திருவிழா நடைபெற்றது. மிகச்சிறப்பாக பலரின் ஒத்துழைப்புடன் இனிது நடைபெற்றது.

உயிரெழுத்துக்களை அறிமுகமாக்கி அவற்றை சிறார்கள் தாங்கி வந்து சொல்லிக்காட்டி விழாவை ஆரம்பமாக்கியது தமிழோடு உயிர் வாழ வேண்டும் என்ற பெருநோக்கை எடுத்து இயம்பியது.

தொடர்ந்து வரவேற்புரையை விழா ஏற்பாட்டாளர் ஆசிரியர் திருமதி நகுலா சிவநாதன் செய்தார்.வரவேற்பு நடனத்துடன் விழா களைகட்டத்தொடங்கி பலரின் கரகோசத்துடன் இளையோர் ஆய்வுத்தேடல்நடைபெற்றது. பாரம்பரிய கலைகளை கண்முன் நிறுத்திய நிகழ்வாக பார்க்கப்பட்டது. விழாவின் நோக்கத்தை திரு குகதாஸ் விளக்கமாக கூறினார்.அதனைத்தொடர்ந்து இளையோர் ஆய்வுத்தேடல் ஆரம்பம் கண்டது அனைவருக்கும் மகிழ்வு தந்த நிகழ்வாக பார்க்கப்பட்டது

RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG

Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de

Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!

புதிய
வாடிக்கையாளர்களுக்கு
100,00€ இருந்து 500,00€
வரை
பெறுமதியான LIDL
அல்லது TANK Gutschein
01.04.2017 முதல்
31-12-2017 வரை

Tel: 05723- 914519 Mobil 0172-5214530 www.rklimmo.de

பெண்களை விருந்துக்கு அழைத்து.. பின்....

டேட் ரேப் :

ஒரு பகீர் பயங்கரம்.

"ஹேப்பி பர்த் டே"

சிரித்துக் கொண்டே கையிலிருந்த மலர்க்கொத்தை நீட்டினான் விக்னேஷ். தூக்கக் கலக்கத்துடன் கதவைத் திறந்த வசந்திக்கு ஆச்சரியம் ஒரு கண்ணிலும், வெட்கம் மறு கண்ணிலும் வழிந்தது. சூரியன் கூட இன்னும் முழுசாய் விழித்திருக்கவில்லை.

"தேங்க்யூ .."

"அப்போ, இன்னியோட உங்களுக்கு பதினாறு வயசு முடிஞ்சிடுச்சா ?" விக்னேஷ் வசீகரமாய்ச் சிரித்தான்.

"ஹே... இருபத்து நாலு ஆகுதுப்பா.... வாழ்த்துக்கள் வாங்கும்போ சந்தோசமா இருக்கு, ஆனா வயசாகுதேன்னு கவலையாவும் இருக்கு" வசந்தியும் சிரித்தாள்.

"டுவண்டி .'.போர் !!! வாவ்.. என்னால நம்பவே முடியல.. ஒ.கே..ஒ.கே... இன்னிக்கு ஈவ்னிங் டின்னர் என்னோட செலவு... மறுக்கக் கூடாது.. ஓகே... ?" சொல்லி விட்டு பதிலைக் கூட எதிர்பாராமல் சட சடவென்று காரில் ஏறிப் போய் விட்டான் விக்னேஷ்.

விக்னேஷ் வசந்தியோடு வேலை பார்ப்பவன். கடந்த ஒரு ஆண்டாக இருவருக்கும் நல்ல பழக்கம் உண்டு. வசந்திக்கு விக்னேஷை ரொம்பப் பிடிக்கும். ரொம்பவே கண்ணியமாய் நடந்து கொள்வான். என்ன தேவையென்றாலும் வந்து உதவுவான். அறிவுரைகள் சொல்வான். போதாக்குறைக்கு அவ்வப்போது அவளை சில்லென மாற்றும் ஜஸ் கட்டிகளையும் வைத்துப் போவான் !

அதிகாலையிலேயே உற்சாகம் வந்து தொற்றிக் கொண்டது வசந்திக்கு. புத்தம் புதிய ஆடையை உடுத்திக் கொண்டு அலுவலகம் சென்றாள். எல்லோரிடமும் வாழ்த்துக்களை வாங்கி வாங்கி அவளுடைய பொழுது ரொம்ப சுவாரஸ்யமாகக் கழிந்தது.

மாலை நேரம் ! "போலாமா ?" கார் சாவியைக் கையில் வைத்து சுழற்றிக் கொண்டே கேட்டான் விக்னேஷ்.

"எங்கே ?" வசந்தி விளையாடினாள்.

"எங்கேயா ?.... ஹேய்... காலைலயே சொன்னேன்.. டின்னர் எல்லாமே ரெடி.. கமான்..." விக்னேஷ் குரலில் இருந்த கெஞ்சலை ரசித்துக் கொண்டே வசந்தி சொன்னாள், "சரி..சரி.. நான் ரெடி... பட்... கொஞ்சம் சீக்கிரம் வீட்டுக்குப் போகணும் ஓகேவா ?""யா..."

இருவரும் காரில் கிளம்பினார்கள். கார் நேராக விக்னேஷின் வீட்டு வாசலில் வந்து நின்றது.

"என்ன.. உங்க வீட்டுக்கு வரீங்க ? ஹோட்டல் போவோம்ன்னு நினைச்சேன்..."

""ஸ்பெஷல் டின்னரெல்லாம் ஹோட்டல்ல குடுக்க முடியுமா என்ன ? நானே ஸ்பெஷலா பண்ணியிருக்கேன் வாங்க..."

விக்னேஷின் வித்தியாசமான அணுகுமுறை வசந்திக்குச் சிலிர்ப்பாய் இருந்தது.

மிக அழகான வீடு. வெகு சுத்தமாக இருந்தது. ஒரு பேச்சிலர் தங்கும் வீடு என்பதை சத்தியம் செய்தால் கூட நம்ப முடியாது ! "ஒருவேளை நான் வருவேன் என்று சொன்னதால் எல்லாவற்றையும் சுத்தமாய் வைத்திருக்கிறானோ ?" வசந்தியின் மனதில் கேள்விகள் ஓடின.

விக்னேஷ் வசந்தியை அழைத்துக் கொண்டு டைனிங் டேபிள் சென்றான்.

"வாவ் !!! .." வசந்தி விழிகளை விரித்து ஆச்சரியப் பட்டாள்.

டேபிளின் நடுவே ஒரு கேக். அருகே இரண்டு மெழுகுவர்த்திகள். சுற்றிலும் உணவு வகைகள் மூடப்பட்ட பாத்திரங்களில்.

"என்ன விக்னேஷ்.. கலக்கறீங்க. என் லை.'.ப்ல நான் இப்படி ஒரு டிரீட் வாங்கினதே இல்லை" வசந்தி நெகிழ்ந்தாள்.

"நானும் இப்படி ஒரு டிரீட்டை யாருக்கும் குடுத்ததில்லை. இதான் முதல் தடவை"

டின்னர் சாப்பாடு ரொம்பவே மகிழ்வாய் சென்று கொண்டிருந்தது.

விக்னேஷ் ஒரு கப்பில் கொஞ்சமாய் வைன் ஊற்றி வசந்தியிடம் நீட்டினான்.

"என்னது இது ?" "இது ஷேர்டோனே..."

"நான் பெயரைக் கேக்கலை... இது வைனா ?" "ஏன் வைன்னு சொல்றீங்க, பதப்படுத்தப்பட்ட திராட்சைப் பழரசம் ன்னு தமிழ்ல்ல சொல்லுங்க" விக்னேஷ் சிரித்துக் கொண்டே வசந்தியின் கைகளில் அதைத் திணித்தான். "இது டாஸ்மாக் சரக்கு கிடையாதுங்க, உடம்புக்கு ரொம்ப நல்லது !" வசந்தி தயக்கத்துடன் வாங்கி அருந்தினாள்.

கொஞ்ச நேரத்தில் ஒரு வித மயக்க நிலைக்குப் போனாள்.

"விக்னேஷ்.... வாட்ஸ் ஹேப்...ப்பனிங்யா...." வசந்தியின் குரல் குழறியது.

விக்னேஷ் இதற்காகவே காத்திருந்தவன் போல அவளைக் கைத்தாங்கலாய் அழைத்துக் கொண்டு அருகில் இருந்த படுக்கையறைக்குப் போனான். ஒரு வெறிப் புன்னகை அவனுடைய இதழ்களில் கோரமாய் உறைந்தது !

மறு நாள் காலையில் விக்னேஷின் படுக்கையறையில் கண் விழித்த வசந்திக்கு படு பயங்கர ஷாக்.... என்ன நடந்தது என்பது கொஞ்சம் கொஞ்சமாய் புரிய ஆரம்பித்தது. விக்னேஷ் எதுவும் தெரியாதது போல ஹாலில் அமர்ந்து டி.வி பார்த்துக் கொண்டிருந்தான்.

"விக்னேஷ்.. நேற்று என்ன ஆச்சு ?" வசந்தியின் குரலில் பதட்டம்.

"நத்திங்... வைன் குடிச்சே... தூக்கம் வருதுன்னு சொன்னே... பெட்ல படுக்க வெச்சேன்.. தட்ஸ் ஆல்" விக்னேஷ் சொன்னான்.

"பொய் சொல்லாதே விக்னேஷ்.. எனக்குத் தெரியும்... வாட் ஹேப்பண்ட் ?"

"நான் ஏதும் பண்ணல, நீதான் என்னைக் கம்பல் பண்ணி...." விக்னேஷ் சொல்லிவிட்டு டீவியில் பார்வையை ஓட்டினான்...

வசந்தி உடைந்து போய் உட்கார்ந்தாள்.

சில நாட்களுக்குப் பின், நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் தனது தோழியிடன் கண்ணீருடன் பேசிக்கொண்டிருக்கையில் தான் அவளுக்கு "டேட் ரேப்" எனும் விஷயமே தெரிய வந்தது.

அதென்ன டேட் ரேப் ? மயக்க நிலையில் பாலியல் வன்முறை செய்வதைத் தான் "டேட் ரேப்" என்கிறார்கள்.

தெரிந்த பெண்களை வசீகரமாய்ப் பேசி ஹோட்டலுக்கோ, தனிமையான இடங்களுக்கோ அழைத்துச் செல்ல வேண்டியது. அவர்கள் குடிக்கும் பானத்தில் டேட் ரேப் ஸ்பெஷல் மருந்தைக் கலக்க வேண்டியது. அவர்கள் மயங்கிச் சாயும் நேரத்தில் அவர்களை பலாத்காரம் செய்ய வேண்டியது. இது தான் டேட் ரேப்பின் அடிப்படை.

அந்த 7 நாட்கள்

April, May,july, Aug ,மாதங்களில்

உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

லூர்ட்ஸ் மாதா புனிதப்பயணம்

Handy: 0175 850 14 89

K.முருகா : 02972 7754

பெண்களை விருந்துக்கு அழைத்து...பின்....

16 ம் பக்க தொடர்ச்சி....



மது அருந்தும் பெண்களென்றால் ஆண்களுக்கு வேலை சுலபமாகி விடுகிறது. பெண்களைக் கட்டாயப்படுத்தியோ, வசீகரமாய்ப் பேசியோ அதிகம் மதுவை அருந்த வைத்து அவர்களை மயக்க நிலைக்குக் கொண்டு சென்று தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி விடுவார்கள்.

இதிலுள்ள சிக்கல் என்னவென்றால், என்ன நடந்தது என்பது மறு நாள் பாதிக்கப் பட்ட பெண்களுக்கு எதுவும் நினைவில் இருக்காது. "நீதான் என்னைக் கட்டாயப்படுத்தி உறவு கொள்ளச் சொன்னே !" என ஆண் குற்றம் சாட்டினால் மறுத்துப் பேசவும் முடியாது. "ஒருவேளை அப்படி இருந்திருக்கலாமோ ? " என்று தான் நினைக்கத் தோன்றும்.

"என்னால தான் இப்படியெல்லாம் நடந்திருக்கு. இது என்னோட தப்பு... இதுல பேச என்ன இருக்கு" என அமைதியுடனும், வலியுடனும் பெண்கள் முடங்கிவிடுவார்கள். !

பதினேழு வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் தான் இதில் ரொம்பவே பாதிக்கப்படுகிறார்கள் என்கிறது இங்கிலாந்தில் வெளியான ஆய்வு முடிவு ஒன்று. பெரும்பாலான டேட் ரேப் கள், காதலன், பழைய காதலன், நண்பன், உடன் வேலை செய்பவர், கொஞ்சம் அறிமுகமானவர் இப்படிப் பட்டவர்களால் தான் நடக்கிறதாம்.

"அவளோட ஆடையே ரொம்ப செக்ஸியா இருந்துச்சு, என்னை வா, வா ன்னு வலியக் கூப்பிடுவது போல இருந்தது" என்பன போன்ற சால்ஜாப்புகள் அடிக்கடி ஆண்களிடமிருந்து எழும். ஒருவருடைய விருப்பம் இல்லாமலும், முழு உணர்வு இல்லாமலும் நடக்கும் எந்த உறவும் பலாத்காரம் தான். செக்ஸி ஆடை அணிவது அவரவர் விருப்பம். அது பாலியலுக்கான அழைப்பு என ஆண்கள் தவறாக அர்த்தம் கற்பிப்பது அவர்களுடைய அறியாமை மட்டுமே.

டேட் ரேப் குற்றத்தில் பயன்படும் எக்கச் சக்க மாத்திரைகள் உள்ளன. இந்த மாத்திரைகளில் சுவையோ, மணமோ, நிறமோ எதுவும் இருக்காது. ஆனால் வீரியமாய்ச் செயல்படும். அத்தகைய மருந்துகளில் மிக மிக முக்கியமானவை இவை.

ரோஹினால், ∴புலண்ட்ரீஸிபம் எனும் வகையைச் சேர்ந்த மருந்து இது. அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட இந்த மருந்து இங்கிலாந்து, மெக்ஸிகோ போன்ற நாடுகளில் தாராளமாய்க் கிடைக்கிறது. இன்னொரு மருந்து ஜி.ஹை.பி என சுருக்கமாய் அழைக்கப்படும் காமா ஹைட்ராக்ஸி பட்ரிக் அமிலம் கலந்த மருந்துகள். மூன்றாவது ஜி பி எல் என அழைக்கப்படும் காமா புடிரெலக்டோன் !

இந்த மருந்துகள் பல வடிவங்களில், பல பெயர்களில் இந்தியாவில் வெகு சாதாரணமாகக் கிடைக்கின்றன என்பது திகிலூட்டும் உண்மையாகும். மாத்திரைகளைப் போலவே எக்ஸ்டஸி போன்ற சில பானங்களும் உள்ளன. இவையும் குடித்தால் குடிப்பவரை அப்படியே அலேக்காக மயக்க நிலைக்குக் கொண்டு செல்லும்.

மயக்கத்துடன் கொஞ்சம் செக்ஸ் உணர்வையும் இந்த மருந்துகள் தூண்டி விடுகின்றன. அதனால் மதுவிலோ, குளிர்பானத்திலோ, ஏன் தண்ணீரிலோ கூட இதைக் கலந்து கொடுத்தால் விஷயம் முடிந்து விட்டது !. குடிப்பவருக்கு முடிவெடுக்கும் திறமை முழுமையாய் போய் விடும். ஒருவித பரவச மயக்கத்துக்குள் செல்வார்கள். எதிராளியின் விருப்பத்துக்கு ஏற்ப வளைந்து கொடுப்பதும், ஒத்துழைப்பதும் ஒரு அடிமை நிலையில் நடந்தேறும்.

பெரும்பாலும் இத்தகைய மருந்துகள் பார்களிலும், இரவு விடுதிகளிலும் எக்கச் சக்கமாய்ப் புழங்குகின்றன என்கிறது காவல் துறை. இந்த மருந்தின் வீரியம் உடலில் இருந்தாலும் அதைக் கண்டுபிடிக்க முடியாது. சிறு நீர்ப்பரிசோதனை, இரத்தப் பரிசோதனை இவையெல்லாம் கூட இத்தகைய போதை உடலில் இருப்பதைக் காட்டிக் கொடுக்காது. எழுபத்து இரண்டு மணி நேரத்துக்குப் பிறகே உடல் இதன் பாதிப்பிலிருந்து முழுமையான விடுதலையைப் பெறும் ! அளவுக்கு அதிகமாகக் கொடுத்தால் உயிரே போய்விடும் எனும் அதிக பட்ச ஆபத்தும் இத்தகைய மருந்துகளில் உண்டு.

"இத்தகைய மருந்துகளைத் தான் ரயிலில் பயணிகளுக்கு பிஸ்கட்டில் கலந்து கொடுத்து பொருட்களை லவட்டிக் கொண்டு போகிறார்கள்" என்கின்றனர் காவல் துறை அதிகாரிகள்.

உலகெங்கும் சமீபகாலமாக இந்த டேட் ரேப் மருந்துகளின் விற்பனை பல மடங்கு அதிகரித்துள்ளன என ஐக்கிய நாடுகள் சபை சமீபத்தில் கவலை தெரிவித்துள்ளது. அமெரிக்காவில் மட்டும் கடந்த ஆண்டு சுமார் எழுபது இலட்சம் பேர் இத்தகைய மருந்துகளை சட்ட விரோதமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இத்தகைய மருந்துகள் மருத்துவத் துறைக்கு மிக மிக முக்கியமானவை. பல நோய்களுக்கும் அறுவை சிகிச்சைக்கும் இவை தேவை என்பதால் இதைத் தயாரிக்காமல் இருக்க முடியாது. அதனால் உலக நாடுகளெல்லாம் ஒன்றிணைந்து இந்த டேட் ரேப் மாத்திரைகளின் பயன்பாட்டுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என ஐ.நா விண்ணப்பம் வைத்துள்ளது. வருமுன் காப்பது தான் டேட் ரேப் விஷயத்தில் ஒரே வழி !

Adchaya International

ADCHAYA INTERNATIONAL

AYVIN THE PERFECT CHOICE

உங்கள் சமையலறைக்கு தேவையான தரமான BRANDED
சமையலறை சாதனங்களை அள்ளிச் செல்லுங்கள்...!

200 € க்கு மேற்பட்டகொள்வனவிற்கு
அழகிய தரமான AYWIN RICE COOKER , அல்லது
CHAPATHY MAKER, அல்லது 2 in 1 PUTTU MAKER
முற்றிலும் இலவசம்...!

100 € க்கு மேற்பட்ட கொள்வனவிற்கு
அழகிய தரமான 15 € பெறுமதியான
Premier PUTTU MAKER
முற்றிலும் இலவசம்...!

இத்துடன் ஐரோப்பா எங்கும்
FREE DELIVERY...!

DTH DIRECT TO HOME
தயாரிப்பாளரிடமிருந்து
பெறப்பட்ட பொருட்கள்
இடைத்தரகர்கள் இல்லாத
நேரடி விற்பனை

விரைவில்..Onlnine Shopping... www.anjaara.com

Vidiem Premier AYVIN ANJARA SREERAM ULTRA SKY Damini MOKSH AGARBATTI

உங்கள் ஆர்டர்களுக்கும் வர்த்தக தொடர்புகட்கும் :

ஜெர்மனி	லண்டன்	சுவிஸ் (சூரிச்)	பிரான்ஸ் (பாரீஸ்)	நெதர்லாந்த்	டென்மார்க் (ஹெர்னிங்)
ADCHAYA INTERNATIONAL	ANJARA (EURPOE) LTD.,	BJ PHOTOGRAPHIC	RAVI :	AASIR :	BABU :
0231-13091030	No : 13, POPPY CLOSE, NORTHOLT, UB5 5TP, U.K 07703214389	0765672319	0952 854664	0031 621604168	0045 - 97120044

கனவு கண்டதிலே ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை எவனோ
என்னகம் தொட்டுவிட்டான்

அண்டவெளி தாண்டி அகண்ட இருட் சுரங்கத்துள் அநாதையை விடப்பட்டது போலான உச்ச விரகத்தாக்கத்தில் மீண்டும் மீண்டும் விம்மித் துயின்ற கண்ணம்மாவின் கனவில் எவனோ ஒருவன் உட்புகுந்து ஆடுகிறான். அந்த நிகழ்வினை நெஞ்சத்தறியில் நெசவு செய்து பார்க்கும் முன்பே அகத்தினை தொட்டுவிட்டான். என்னவகையிது என்று அதன்பின் ஆராய்ந்து பார்க்கவா முடியும். ஆனந்த நீர்வீழ்ச்சியில் நனையத் தானே முடியும்.

"வினவக் கண்விழித்தேன் - ஸகியே
மேனி மறைத்து விட்டான்
மனதில் மட்குடிலுமே புதிதோர்
மகிழ்ச்சி கண்டதடி

யாரென ஏதென பல கேள்விகள் வினவ உறக்கத்தில் இருந்து கண் விழித்துப் பார்ப்பதற்குள் உடல் மறைத்து விட்டான். ஆனால் கனவில் அவன் வருகையால் மனதெல்லாம் புதுவித மகிழ்ச்சி மாற்றத்தில் மயங்கியது.

"உச்சி குளிர்ந்தபடி - ஸகியே
உடம்பு நேராச்சு
முச்சிலும் வீடுமெல்லாம் - முன்னைப் போல்
மனதுக்கு ஒத்ததடி
இச்சை பிறந்ததடி எதிலும்
இன்பம் விளைந்ததடி
அச்சம் ஒளிந்ததடி - ஸகியே
அழகு வந்ததடி.

காதலில் வீழ்வதே மேல் இன்பம். எடுத்த காரியத்தில் எண்ணிய படியான வெற்றிக்கு விட்டமின். விரகத்தினால் சோர்ந்து வாடிய உடல் சட்டென்று பிறந்த இன்பக்குளிர்ச்சியில் நேராச்சு. சுற்றமும் தோற்றமும் மனதிற்கு ஒத்ததாகவே பரவச இன்பம் தரும். சேய்கின்ற காரியம், செய்யப் போகின்ற விடயம், என்னுடையது, உன்னுடையது என்ற பேதமின்றி எல்லா நிகழ்வுகளிலுமே இச்சை தெரியும். விருப்பம் ஏற்படும். உள்ளுக்குள் நிகழ்ந்து கொண்டிருந்த மனப்பீதியும் அச்சமும் இல்லாது போக மகிழ்ச்சிப் பெருக்கத்தில் உள்ளமும், உடலும் அழகு பெறும். பேரின்ப பொழுது களுக்கு வாய்பாடாகும்.

"எண்ணும் பொழுதெல்லாம் - அவன்கை
இட்ட இடத்தினிலே
தண்ணென்று இருந்ததடி புதிதோர்
சாந்தி பிறந்ததடி"

நினைவுகளே நிழலெனத் தொடர்ந்து நிம்மதி தரவல்ல அருமருந்தாய் இருக்கும் போது ஸ்பரிசம் என்னும் பரிசு??? ஆஹா! மொழியால் விளக்கின் பழியது.

அத்தனை பரிபூர்ண சுத்த மார்க்கம் அங்கங்களின் தொடுகை அவன் கை ஆழ்த்தித் தொட்ட இடத்தினை காலங்கடந்தும் பல முறை எண்ணும் பொழுதெல்லாம் புதிதாய் ஓர் நிறைவும் நிம்மதியும் தர என்றும் பசுமையான குளிர்ச்சியையே தரவல்லது.

"எண்ணி எண்ணி பார்த்தேன் - அவன் தான்
யாரெனச் சிந்தை செய்தேன்
கண்ணன் திருவுருவம் - அங்ஙனே
கண்ணின் முன் நின்றதடி!"

விட்டகலாப் பார்வையை பரிநளித்த காதல் கண்மூடிய இருளிலும் கோடி சூர்ய பிரகாச திருமுகக் காட்சியை தந்த காதல் ஐம்புலன்களின் செயற்பாட்டை ஒவ்வொன்றாய் பிரித்துப் பிரித்து அனுபவித்து பொறிகளுக்கு விருந்து வைத்த காதல். தன்னை தாம் பிடிப்பதற்கும் பிறரைத் தாம் மதிப்பதற்கும் அகத்திடை ஆரவார ஆற்றல் தந்த காதல் ஒன்றிலிருந்து பலதும் பலதெல்லாம் ஒன்றெனவும் பிரபஞ்சத்தின் நித்திய வாசம் வீசச் செய்த காதல் கடிகார முட்களை அலட்சியப்படுத்தி காலம் துறந்து தியானிக்கும் காதல் தரை தொட்டு கால் இருக்க வியந்து வியந்து விண் தொட்டு வரும் மனம் தந்த காதல் எத்தனை முறை பூத்தாலும் அள்ளிக் கொண்டு வாழ்க்கை நந்தவத்தைஅழகு செய்வோம். மெய்யது கொண்டு மெய்யது செய்வோம் வாழ்வு இனிக்கட்டும்.

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€99
மட்டுமே
SET TOP BOX
INCLUDED

புதுப்பித்தல்
15
மாதங்கள்
£/€99
மட்டுமே

45க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

INCLUDED

TENTKOTTA
1000க்கும் அதிகமான Tamil திரைப்படங்கள்

EROSNOW
6000க்கும் அதிகமான Hindi & Tamil திரைப்படங்கள்

7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்

Roku tv AirPlay chromecast amazon fireTV kindle fire XBOX

SUBSCRIBE NOW!

GERMANY
069 1200 7102

UNITED KINGDOM
0207 132 2727

www.lycatv.tv



செய்யும் தொழிலே தெய்வம். செய்கின்ற வேலையை நாம் விருப்புடன் செய்யவேண்டும்.

நான் நான்கு பெண்களை கேட்டிருந்தேன்.

அவர்கள் வழக்கறிஞராகவும், வைத்தியராகவும், மருந்தகத்தில் வேலை புரிபவர்களாகவும் மற்றும் ஒப்பனையாளராகவும் வேலை பார்த்து வருகின்றனர். கூடுதலான பெண்கள் இத்துறைகளில் வேலைபார்த்து வருகின்றனர்.

வழக்கறிஞராக வேலை செய்பவர் சொன்னார் நான் நியாயத்திற்காகவும் உண்மைக்காகவும் போராடுவதை விரும்புகிறேன் என்றார். சில வழக்குகளில் காவல்துறையினருடன் நேரடியாகப் பேசும் வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் கூறி அதனூடாக புது அனுபவங்கள் உண்டாகின்றன.

சில சம்பவங்கள் மிகக் கொடூரமாக மிகக் கவலையாகவும் இருக்கும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கட்டாயமாகக் கிடைக்க வேண்டும். அது வரை நான் போராடுவேன் போராடிக்கொண்டே இருப்பேன் என்றார்.

அடுத்ததாகப் பதிலளித்தவர் மருத்துவர். இந்தப் பெண்ணை நான் கேட்டேன் நீங்கள் அறுவை சிகிச்சை செய்பவரா என்று, ஆம் என்றார்.

ஆஹா, என்ன ஒரு துணிவு. எனக்கு இவற்றைக் கேட்டாலே பயம் வந்துவிடும். அவர் எனக்கு சொன்ன பதில், வைத்தியராக இருந்து நான் மக்களின் உயிரைக் காப்பாற்ற நினைக்கிறேன் என்றார். மருந்துகள் மூலமோ மற்றும் அறுவைச் சிகிச்சை மூலமோ என்றார். இவ்வுலகில் எவ்வளவோ மக்கள் கொல்லப்படுகின்றனர், கேட்கவே தாங்கமுடியாத கவலையல்லவா.
நான் எனது தொழிலை தெய்வமாக மதிக்கின்றேன்.

மருந்தகத்தில் வேலை பார்க்கும் பெண்.

அவர் கூறியதும் வைத்தியராகப் பணிபுரியும் பெண் கூறியதும் ஒரே பதிலாக இருந்தது. அவர் சொன்னார் மனிதர்களின் நோயைப் போக்கும் மருந்துகள் கொடுக்கப்படும் இடத்தில் வேலை புரிவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.
மருந்தகத்துக்கு வருபவரின் கண்களில் கவலைகளையும் துயரங்களையும் காண்கிறேன் என்றார். அவர்களுக்கு உதவும் வாய்ப்புக் கொடுத்த கடவுளுக்கு நான் இத்தருணத்தில் நன்றி கூற விரும்புகிறேன்.

ஒப்பனை என்றாலே பெண்களுக்குப் பிடித்தது.

அத்துறையில் வேலை பார்க்கும் பெண்ணிடம் கேட்டேன்.
அவர் கூறியது ஒவ்வொரு பெண்ணும் வெவ்வேறு அழகுடையவர்கள். அவர்களுக்கு ஒப்பனை செய்வதில் எனக்கு சந்தோசம். முகங்களை அழகுபடுத்தல் மற்றும் கூந்தலை வித்தியாசமான முறையில் வடிவமைத்தல் போன்றவிடயங்கள் எனக்குப் படித்தவை. நமது கலாச்சார திருமணங்களில்

இன்றைய தமிழ்பெண்கள் விரும்பும் தொழில்?

றஜினா தருமராஜா

மணப்பெண்ணை அழகுபடுத்திய பின் அப்பெண்ணில் தெரியும் சந்தோசத்தைப் பார்க்கும் போது என் மனதில் தோன்றும் மகிழ்ச்சிக்கு வார்த்தையே இல்லை என்றார்.

பெண் என்பவள் அனைத்து துறைகளிலும் வேலைகள் பார்க்கக் கூடியவள்!
காவல் துறை, தீயணைப்புத் துறை போன்ற வேலைகளளச் செய்யத் துணிந்தவள் பெண்.
ஓர் உயிரை இவ்வுலகிற்கு பல சிரமங்கள் வேதனைகள் மத்தியில் கொண்டு வருபவள் பெண்.
எந்த வேலையைக் கொடுத்தாலும் சரியாகவும் நேர்த்தியாகவும் செய்யக்கூடியவள்!

Adava Brida
1 Etage Brück str 20-26
44135 Dortmund
02343258759 / 015204124756 / 017672787821
*Bridal Make-up
*Hochzeit make-up
*Puberty make-up
*Christian make-up
*Facial
*Wimpernverlängerung
*Waxing
*Blumenkette
NANTHA FOTO

11ம் ஆண்டு நினைவு அஞ்சலி

திதி 07.05.2017

தோற்றம்
25.09-1942

மறைவு:
09.05.2006

திருமதி ஞானேஸ்வரி.சிவஞானசுந்தரம்

பதினொரு ஆண்டுகள் சென்றாலும் தினம் உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே அம்மா என்றும் அன்பே என்றும் சொல்ல நீயில்லை! உன் நினைவால் வாடி வதங்குகின்றோம் இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள் இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன நினைவெல்லாம் நீயே தாயே! என்றும் உன்னை மறக்காமல் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்.சு.சிவஞானசுந்தரம் யேர்மனி டோட்மூண்ட் Handy: 0176 69 366 433

உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்

ஆங்கிலம்.யேர்மன்.பிரஞ்.துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள். கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

தன்னைச் சுற்றிய மனிதர்களோடு கொண்டாடினால்! மே தினம், மேலான தினமாய் மாறும்!

சேவியர்

உழைப்பாளர் தினம்

உலகம் நமது உழைப்பில் உருவாகவில்லை, ஆனால் நமது உழைப்பு இல்லாமல் உலகில் வாழ்க்கை இல்லை. உழைக்காதவன் உண்ணலாகாது எனும் வார்த்தை மனுக்குலத்தில் உழைப்பின் தேவையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. உழைப்பாளர் தினம் தோன்றிய வரலாறும், அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின் விடுதலை கீதமும் தாம் உழைப்பாளர் தினத்தில் பேசப்படுகின்றன. உலகின் கடைகோடியில் அடிமைத்தனத்தில் உழலும் உழைப்பாளியின் துயரம் நமக்கு அன்றைய தினம் பேசு பொருளாகிறது. ஆப்பிரிக்க நாட்டின் வறுமைப் பகுதிகளும், சோமாலியாவின் துயரங்களும், ஒடுக்கப்படும் உழைப்பாளரின் துயரங்களும் நமக்கு எளிதாகப் பேச முடிகின்றவையாய் இருக்கின்றன. உணர்ச்சி பொங்க பேசிவிட்டு சற்று நேரத்துக்குப் பின் தொலைக்காட்சியில் ஒரு அதிரடித் திரைப்படம் பார்ப்பதுடன் நமது உழைப்பாளர் தின உணர்வுகள் மங்கிப் போய்விடு கின்றன.உழைப்பாளர் தினம் என்பது நமது வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும் ?

1. நமது வீட்டில் வேலைசெய்யும் பெண்கள் இருக்கிறார்களா ? அவர்கள் தான் நமது உழைப்பாளர் தினத்தின் மையம். அவர்களுடைய வாழ்க்கையில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றனஇ தேவைகள் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முயல்வோம். அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வோம்.

2. ஓய்வு என்பது நமக்கு மட்டுமானது. நமது வீட்டில் வேலைசெய்யும் நபர்களுக்கானதல்ல எனும் மனநிலையை உதறுவோம். நம்மைப் போல அவர்களும் மனிதர்களே. நம்மை விட அதிகமாய் உடல் உழைப்பைச் சிந்தும் மனிதர்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்கும் அதிக ஓய்வைக் கொடுப்போம்.

3. உழைப்பாளர்களை மதிப்பது என்பது அவர்களுக்கு பொருளாதார உதவி அளிப்பது மட்டுமல்ல. அவர்களோடு அன்பாகப் பேசுவதும், பழகுவதும், அவர்களை மரியாதையுடன் நடத்துவதும் தான். அந்த உணர்வை எப்போதும் கொண்டிருப்போம்.

4. நமது இல்லங்களில் நமது வாழ்க்கைத் துணையின் பணிகளில் நாம் எவ்வளவு பங்களிப்பு செய்கிறோம் ? அது அவர் பாடு, அது அவள் பாடு என ஒதுங்கியிருக்கிறோமா ? குறைந்த பட்சம் அந்த நபர் செய்யும் சின்னச் சின்ன உழைப்புகளை அங்கீகரித்துப் பாராட்டுவோம்.

5. நமது அலுவலகத்தில் நம்மோடு வேலைசெய்பவர்களோ, நம்மை விடக் குறைவான ஊதியத்துக்கு வேலை செய்பவர்களோ நமது கவனத்துக்கு வருகிறார்களா ? நமது அலுவலகங்களை தூய்மை செய்யும் நபர்களுடைய வாழ்க்கை நம்மை பாதிக்கிறதா ? அவர்களுடைய தேவைகளில் கொஞ்சம் தோள்கொடுக்க முயல்வோம்.

6. "இது என்னோட வேலை" என நம்மைச் சுற்றி இயங்கும் மக்கள் பலர் உண்டு. உதாரணமாக பால்காரர், பேப்பர் போடும் பையன், காய்கறி கடைகாரர், இப்படி பலர். அவர்கள் யாருக்காவது நாம் ஒரு ஆனந்த ஆச்சரியம் கொடுத்து அந்த புன்னகையை நேசிப்போம்.

7. உழைப்பு என்பது நமது உடல் உழைப்பு மட்டுமல்ல. நமக்காக நட்புடன் நமது கதைகளைக் கேட்டும், நமது இன்ப துன்பங்களைப் பரிமாறியும் நம்மோடு இருக்கும் மனிதர்களுக்கு நாம் ஏதேனும் ஒரு பொழுதை அன்பளிப்பாய் வழங்குவோம்.

8. போட்டி நிறைந்த உலகம் இது. குறைந்த சம்பளத்துக்காக ஆட்களை வேலைக்கு அமர்த்த பிரம்ம பிரயர்த்தனம் செய்கிறோம். அப்படி நமக்காய் வேலை செய்யும் நபர்களுக்கு அவர்களுடைய எதிர்காலம், குழந்தைகளின் கல்வி, உடல்நலம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு நல்ல தொகையை அன்பளிப்பாய் கொடுப்போம். அல்லது அவர்கள் கேட்ட ஊதியத்தை விட அதிகமாகக் கொடுத்து மகிழச் செய்வோம்.

9. தேவைகள் இல்லாத மனிதர்கள் இல்லை. அந்த தேவைகளை நிவர்த்தி செய்ய இயலாத மனிதர்களும் இல்லை. இறைவன் பகிர்தலை விரும்புகிறார். ஒருவர் பாத்திரத்தோடு இருக்கையில், இன்னொருவன் பானத்தோடு இருக்கிறான். இட்டு நிரப்புதலே மனிதனின் பணி. பணம் சம்பாதிக்க வேண்டும் என இருக்கின்ற அதே ஆர்வமும், உற்சாகமும் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்பதிலும் நமக்கு இருக்கட்டும்.

இந்த சின்னச் சின்ன பத்து சிந்தனைகளையும் மனதில் அசைபோடுவோம். சோமாலியாவின் எலும்பு மனிதர்களுக்காய் நம்மால் செய்ய முடிந்தது பிரார்த்தனையும் அனுதாப சிந்தனையும் தான். ஆனால் நம்மைச் சுற்றி உலவும் மனிதர்களுக்கு நாம் எவ்வளவோ செய்ய முடியும். இந்த உழைப்பாளர் தினத்தை அப்படிக் கொண்டாடுவோம்.

உலகிலுள்ள மக்கள் அனைவரும் உழைப்பாளர் தினத்தை தன்னைச் சுற்றிய மனிதர்களோடு கொண்டாட ஆரம்பிக்கும் போது மே தினம், மேலான தினமாய் மாறும்.

நீங்க பிறந்த நேரமும் அதன் பலனும்!

ஒருவர் பிறந்த நேரத்தை வைத்து தான் ஜாதக கட்டங்கள், இராசி, நட்சத்திரம் குறிக்கப்படுகிறது. இதன் மூலம் ஒருவரது இல்வாழ்க்கை, சமூக வாழ்க்கை, வேலை, குணாதிசயங்கள் எப்படி இருக்கும் என அறியப்படுகிறது.
அந்த வகையில், குறிப்பிட்ட நேரத்தில் பிறப்பவர்களது குணாதிசயங்கள் மற்றும் வாழ்க்கை எப்படி இருக்கும் என இங்கு காணலாம்...

அதிகாலை 6 முதல் 8 அதிகாலை

6 முதல் 8 இந்நேரத்தில் பிறந்தவர்கள் அமைதியான மனோபாவம் கொண்டிருப்பார்கள். சிலர் நேரத்தை வீணடிக்கும் பழக்கம் கொண்டிருப்பார்கள், இது இவர்களுடைய எதிர்காலத்தை பாதிக்கும்.

காலை 8 முதல் 10 காலை

8 முதல் 10 இந்நேரத்தில் பிறப்பவர்கள் நல்ல நட்பும், சுற்றமும் கொண்டிருப்பார்கள். பொருளாதாரம் சீரான நிலையில் இருக்கும். இவர்களது வாழ்வில் பணம் முக்கிய பங்கு வகிக்கும். மேலும், இவர்கள் சற்று விரக்தியுடன் காணப்படலாம்.

நண்பகல் 10 முதல் 12 நண்பகல்

10 முதல் 12 இந்நேரத்தில் பிறந்தவர்கள் பின்தொடரும் காரியங்கள் எல்லாம் வெற்றியே தரும். இவர்களது வாழ்க்கை வெற்றிகரமாக அமையும். பெருமை கொள்ளும் வகையில் வாழ்வார்கள்.

மதியம் 12 முதல் 2 மதியம்

12 முதல் 2 இந்நேரத்தில் பிறப்பவர்கள் அதிக பயணம் சார்ந்த எதிர்காலம் கொண்டிருப்பார்கள். இவர்களது வேலை அல்லது பர்சனல் விஷயங்கள் பயணம் சார்ந்து அமையலாம். புத்திகூர்மை கொண்டுள்ளவர்களாக திகழ்வார்கள். நல்ல குணத்திற்கு பெயர்பெற்று திகழ்வார்கள்.

மதியம் 2 முதல் 4 மதியம்

2 முதல் 4 பணம் சார்ந்து துறையில் சிறந்து விளங்குவார்கள். எதையும் லீகலாக செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை கொண்டிருப்பார்கள்.

மாலை 4 முதல் 6 மாலை

4 முதல் 6 இந்நேரத்தில் பிறந்தவர்கள் பொறுப்பு, கடமை அதிகம் கொண்டவர்களாக இருப்பார்கள். திருமணத்திற்கு பிந்தைய வாழ்க்கை வலிமையாக இருக்கும். மக்களுடன் அதிகம் தொடர்பு கொள்ளும் வகையிலான வேலை செய்வார்கள்.

மாலை 6 முதல் 8 மாலை

6 முதல் 8 இந்நேரத்தில் பிறந்தவர்கள் தங்கள் வாழ்க்கை தங்களுக்கு நெருக்கமான அல்லது நண்பர்களை சார்ந்து வாழும் விதமாக அமைந்து காணப்படுவார்கள்.குடும்பம் என்பது இவர்களுக்கு இரண்டாம்பட்சம்தான். சமூக வாழ்க்கையில் அதிகம் இணைந்திருப்பார்கள்.

இரவு 8 முதல் 10 இரவு

8 முதல் 10 இந்நேரத்தில் பிறந்தவர்கள் மத்தியில் கற்பனை திறன் அதிகம் காணப்படும். திறமைகள் அதிகம் கொண்டிருப்பார்கள். தங்களுக்கு பிடித்த வேலைகளை மட்டுமே செய்வார்கள், அதிலும் சிறந்து காணப்படுவார்கள்.

இரவு 10 முதல் 12 இரவு

10 முதல் 12 இந்நேரத்தில் பிறந்தவர்கள் வெற்றி, தோல்வியை சமமாக காணும் பண்பு கொண்டிருப்பார்கள். ஏற்றத்தாழ்வுகளை எளிதாக கடந்து வந்துவிடுவார்கள்.

நள்ளிரவு 12 முதல் 2 நள்ளிரவு

12 முதல் 2 இந்நேரத்தில் பிறந்தவர்கள் அதிக புத்திசாலியாக இருப்பார்கள். சாகசங்களை விரும்புவார்கள். பயணிக்க விரும்புவார்கள். ஊடகம் சார்ந்த வேலையில் அதிக கவனம் செலுத்துவார்கள்.

நள்ளிரவு 2 முதல் 4 நள்ளிரவு

2 முதல் 4 இந்நேரத்தில் பிறந்தவர்களுக்கு உணவு சார்ந்த விருப்பம் அதிகம் இருக்கும். குடும்பம் மற்றும் பொருளாதார நிலை மேலோங்கி காணப்படும்.

அதிகாலை 4 முதல் 6 வரை

4 முதல் 6 வரை
இந்நேரத்தில் பிறந்தவர்கள் மிகவும் உற்சாகமானவர்களாகவும், அதிக விருப்பமுள்ளவர்களாகவும் இருப்பர். இத்தகையவர்களது பிரம்மாண்டமான கற்பனை திறனால், இவர்கள் நல்ல கற்பனை வளம் மிக்கவர்களாக திகழ்வர்.

நம்மூரில் அதிகம் கதைத்தால் "காகம் கரையும் நேரம் பிறந்தவனோ" என்பார்கள் அங்கும் நேரத்திற்கும், குணத்திற்கும், முடிச்சுப் போட்டே உள்ளனர்.

ஆயுள்வேத வைத்திய நிலையம்

டாக்டர்.ஆனந்தி B.S.M.S, A.M.P, S.M.P., R.M.P (Ind) Dipl.Ayurveda(Germany)

சுகம்! அது நிரந்தரம்!!

எமது வைத்தியத்தில் சிறப்பு பக்கவிளைவுகள் ஏதும் கிடையாது.

கடந்த 18 வருட காலமாக ஆயுள்வேத சித்தவைத்தியத்தில் அனுபவமும் நிபுணத்துவமும் பெற்ற வைத்தியக்கலாநிதி Dr.ஆனந்தி அவர்கள் தமது குழுமத்துடன் நடத்திவரும் அரச அங்கிகாரம் பெற்ற வைத்திய நிலையம்.

நீரிழிவு நோய் (Diabetes)
இரத்த அழுத்தம் (Blood pressure)
அஸ்மா சளித்தொல்லை,இருமல்
மூட்டுவலி, கை, கால், உழைவு, செமிபாட்டுப்பிரச்சினை,
தோல்வியாதி, சிறுநநீரகக்கோளாறு.
உடற்பருமன் பிரச்சினை
மற்றும் சலரோகத்தால் ஏற்படும்
ஆண்மைக்குறைபாடுகள்
அனைத்தும் பக்கவிளைவுகள்
அற்றமுறையில்
குணப்படுத்தப்படும்.

Tel:02751 427 9575

Ayurveda Praxis-Am Baumrain 06 / 57319 Bad Berleburg Möbile: 0175 75 85 952

தேவாலயங்கழுக்கு என்ன சலுகைகள் உரிமைகள் இருக்கிறதோ!

அவற்றை இந்து ஆலயமான கம் காமாட்சி அம்பாள் ஆலயத்திற்கும் வழங்கப்படும்!

ஹம் காமாட்சி அம்பாள் ஆலயம் ஆரம்பித்து 28 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. ஆலயத்தில் உற்சவங்கள் தொடர்ந்து 25 ஆண்டுகள் நடைபெற்றுவருகின்றது. ஜேர்மனியில் இருக்கும் கத்தோலிக்க தேவாலயங்கழுக்கு என்ன சலுகைகள் உரிமைகள் இருக்கிறதோ அவற்றை இந்து ஆலயமான கம் காமாட்சி அம்பாள் ஆலயத்திற்கும் வழங்கவேண்டும் என்று சென்ற 13 ஆண்டுகளாக ஜேர்மனிய அரசாங்கத்தில் முனிஸ்ரர் நீதிமன்றத்தில் கம் காமாட்சி அம்பாள் அலயத்தால் வழக்குத் தொடரப்பட்டு வந்து சென்ற இரண்டு ஆண்டுகளாக பல தடங்கல்கள் இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் 2017 பெப்ரவரி மாதம். வழக்கு வெற்றியுடன் பூர்த்தியாகியது.

இது சம்பந்தமாக ஜரோப்பிய மாநில மந்திரியும் கம் நகரபிதாவும் எஸ்.பி.டி காலாச்சார மந்திரியும் கம் காமாட்சிஅம்பாள் ஆலயத்திற்கு வருகைதந்து ஆலயத்தைப் பார்வையிட்டு தாங்கள் இந்து ஆலயத்திற்கு வழங்கிய நீதிமன்ற தீர்ப்பு சரியானதே என்று மகிழ்தனர். ஆலயத்திற்கு தாங்கள் வருகை தந்தது தங்கழுக்கு மகிழ்சி என்றும் ஆலயத்தில் செலவிட்ட 3 மணி நேரமும் ஆனந்தம் அடைந்த்தாகவும் கூறிச் சென்றனர்.

படங்களும், தகவலும்: ஆன்மீகத்தென்றல். த.புவனேந்திரன் (சிவத்தமிழ் உதவி ஆசிரியர்)

மனிதாபிமானம்

(50 வார்த்தைகளுக்குள் ஒரு குறும் கதை)

கே.எஸ்.சுதாகர்

அலங்காரம் அந்தரங்கமானது.

(50 வார்த்தைகளுக்குள் ஒரு குறும் கதை)

இன்று சீக்கிரமாகவே வேலையிடத்திற்கு வந்துவிட்டேன். பாத்றூமைத் திறந்து நுழைந்தேன்.

"பிரியா கெற் அவுற்" பேனாவால் இமைகளைக் கீறியபடி மொட்டந்தலையுடன் நின்ற மேலதிகாரி கத்தினார்.

இதுநாள்வரை அவரை அழகான அன்பான பெண்மணியாகவே சந்தித்திருந்தேன்.

அன்று முழுவதும் கடுமையான வேலைகள் தந்தார். அழ வைத்தார். வேலை முடிந்ததும் என்னைத் தனியாகச் சந்தித்தார்.

தன்னை அந்த நிலையில் பார்த்ததை, நான் யாருக்கும் சொல்லக்கூடாது என்று உறுதிமொழி வாங்கிக் கொண்டார்.

10ம் பக்கத் தொடர்ச்சி

ஜரோப்பாவில் அகதிகளை ஏற்றிடும் நாடுகளில்

மொறோக்கோ, அல்ஜீரியா, ருனீசியா, லிபியா, எகிப்து, கிறீஸ்லாந்து, இத்தாலி நாடுகளின் வழியாகக் கடல் மார்க்கமாக ஜரோப்பா நாடுகளுக்குள் வந்து சேர்ந்த அகதிகள்..

2015ம் ஆண்டில் - 10.22.890 பேர்

2016ம் ஆண்டில் - 3.66.600 பேர்

உலகில் போர், உள்நாட்டுப்போர், இயற்கை அனர்த்தம், பசி, பட்டினி, அரசியல், சமயம் , இனம், சமூகக் குழப்பங்களால் தமது சொந்த நாட்டைவிட்டு இடம்பெயர்ந்தோரில் முன்னணி வகிப்போர் 2016ம் ஆண்டு முடிவடையும்வரை...

சிரியா நாட்டவர்கள் - 6.3 மில்லியன்பேர் (63 லட்சம்)
ஈராக் நாட்டவர்கள் - 3.1 " (31 லட்சம்)
ஸ்சாட் நாட்டவர்கள் - 2.4 " (24 லட்சம்)
யெமன் நாட்டவர்கள் - 2.0 " (20 லட்சம்)
தென்சூடான் நாட்டவர்கள் - 1.3 " (13 லட்சம்)

மேற்கூறிய பல பாதிப்புக்களால் உலகம் பூராகவும் தற்போது 65 மில்லியன் மக்கள் (6 கோடி 50 லட்சம்) மக்கள் உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலுமாக அகதிகளாக வாழ்கிறார்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விபரம் அறிவித்துள்ளது.

புள்ளிவிபரங்கள்:- ஐக்கியநாடுகள்சபையின் அகதிகள் பிரிவு
ஜேர்மனிய அரச புள்ளிவிபரப் பிரிவு
ஜேர்மனிய வெளிநாட்டவர்கள் பிரிவு
தகவல்;- ஜேர்மனிய "Focus" சஞ்சிகை 4-2017

படங்கள்:வெற்றிமணி

யேர்மனியில் அறிவியல் அரங்கமும் "நாங்கள்" சிற்றிதழ் அறிமுகமும்

கடந்த ஞாயிற்றுக் கிழமை (09.04.2017) அன்று யேர்மனி டோட்முண்ட் நகரில் அமைந்துள்ள தமிழர் அரங்கத்தில் அறிவியல் எழுத்தாளர் ராஜ்சிவா அவர்களுடனான கலந்துரையாடல், சாந்தி நேசக்கரம் அவர்களின் "உயிரணை" நாவல் அறிமுகம், என்னுடைய "நாங்கள்" சிற்றிதழ் அறிமுகம் ஆகிய மூன்று நிகழ்வுகளும் சிறப்பாக நடந்தன.

50இற்கும் மேற்பட்டவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். ராஜ்சிவா அவர்களுடைய அறிவியல் விளக்கங்களை சபையோர் கவனமாக செவிமடுத்தனர்.
அதன் பின்னர் சாந்தி நேசக்கரம் அவர்களின் "உயிரணை" நாவல் அறிமுக நிகழ்வு நடந்தது. நூல் அறிமுகத்தை போராளிக்கலைஞர் துளசிச்செல்வன் அவர்கள் நிகழ்த்தினார்.

அதன் பின்னர் "நாங்கள்" சிற்றிதழ் அறிமுகம் நடந்தது. சிறிய விழாவாக இருந்தாலும், பேசப்பட்டபொருள் பேசவேண்டிய பொருளாக இருந்தது.

50 வயதுக்கு மேல் உள்ளவர்கள் தங்களை பிள்ளைகளும், உறவினர்களும் பார்த்துக் கொள்வார்கள் என்று இருந்துவிடாமல் இருக்க ஒரு படம்!

அழக்கழ படம் இயக்காதீங்க மாப்பிள்ளை: தனுஷ்க்கு ரஜினி அறிவுரை



பவர் பாண்டி படத்தை விறு விறுவென இயக்கி முடித்துள்ளார் தனுஷ். படம்சென்றமாதம் வெளியானது. இந்நிலையில் அவர் தனது படத்தை மாமனார் ரஜினிகாந்துக்கு போட்டுக் காட்டியுள்ளார். ப. பாண்டி படத்தை பார்த்த ரஜினிகாந்த் அசந்துவிட்டாராம்.

50 வயதுக்கு மேல் உள்ளவர்கள் தங்களை பிள்ளைகள், உறவினர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று இருந்துவிடாமல் தங்களுக்கு என பணம் சேமிக்க வேண்டும் என்று படத்தில் கருத்து தெரிவித்துள்ளார் தனுஷ். இம்பிரஸ்ட் இம்பிரஸ்ட் படத்தை பார்த்த ரஜினி இயக்குனர் தனுஷின் திறமையால் இம்பிரஸ் ஆகியுள்ளார்.

இந்த ஒரு படம் போதும் மாப்ளே அடுத்த 10 வருஷத்துக்கு அனைவரும் உங்களை பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள் என்றாராம் ரஜினி.

அடிக்கடி படம் இயக்காதீங்க மாப்பிள்ளை: தனுஷ்க்கு ரஜினி அறிவுரை

Exclusive Online Offers:

Kerven GmbH இன் ஹம் காமாட்சி அம்மன் தேர்த் திருவிழாவை முன்னிட்டு எமது நிறுவனம் வழங்கும் சிறப்பு கழிவுகள் இன்று முதலே ஆரம்பம்!

1) **Lebara play** வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் 20€ விசேட விலைக் கழிவு அல்லது மிக்சி இலவசம்.
2) உங்களிடம் தற்போதுள்ள எந்தவொரு Set top box யும் எங்களிடம் கொடுத்து 50€ விசேட விலைக் கழிவோடு எங்களின் Lebara play box ஐ பெற்றுக் கொள்ளலாம்.

15.05.2017 தொடக்கம் 20.06.2017 ஹம் காமாட்சி அம்மன் தேர்த் திருவிழா வரை

முதல் முந்தும் 500 வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே இச் சலுகை எமது இணையத்தளத்தின் மூலம் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

www.kerven-gmbh.com

KERVEN GMBH
Rheinische Str. 64 | 44137 Dortmund
Tel: 023117721820 | 023133015738
Mob: 01738048459
E-Mail:info@kerven-gmbh.com

KERVEN GMBH
191 Rue du Faubourg 75010 Paris
Tel : 09 77 19 59 11 | Mob : 06 26 06 05 22
+33 754 11 20 20
E-Mail:info@kerven-gmbh.com



திருமந்திரமும் வாழ்வியலும் 17

[சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி]

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

தாய் வயிற்றில் கரு உருவாகி பிறக்கும் வரை நடைபெறும் செயலை திருமந்திரம் கற்பக்கிரியை என கூறுகிறது. இருபத்தைந்து தத்துவங்கள் (பூதம்-5, தன்மாத்திரை-5, ஞானேந்நிரியம்-5, கன்மேந்திரியம்-5, அந்த கரணம்-4, புருடன்-1) பிறப்பெடுக்கும் உயிருடன் இணைகின்றன. இவைபற்றி திருமந்திரம் பாடல் எண் 457 இல் கூறப்பட்டுள்ளது. (இப்பாடல் இந்தப் புத்தகத்தில் உடற் கூற்று அறிவியல் என்னும் பகுதியில் உள்ளது) விஞ்ஞானத்தால் இன்றுவரை முடியாத பல விடையங்களை திருமந் திரத்தில் திருமூலநாயனார் அன்றே கூறிவைத்துள்ளார் அவற்றில் சில பாடல்களைப் பார்ப்போம்.

பிறக்கப்போகும் குழந்தை ஆணா? பெண்ணா? பாடல் எண் 482

"குழவியும் ஆணாம் வலத்தது ஆகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது ஆகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே".

உடலுறவின்போது ஆணுக்கும், பெண்ணுக்கும் மூச்சுக் காற்று வலது பக்க மூக்குவழியாக வெளிப்பட்டால்,பிறக்கும் குழந்தை ஆணாகும். மூச்சுக் காற்று இருவருக்கும் இடப்பக்கம் வெளிப்பட்டால் பெண் குழந்தை பிறக்கும். அபானவாயு (மலக் காற்று) எதிர்த்து வந்தால் சுக்கிலம், சிதறி இரட்டைக் குழந்தை பிறக்கும். இருவருக்கும் இடப்பக்க மூச்சுக் காற்றும், வலப்பக்க மூச்சுக் காற்றும் சமமாக இருக்குமானால் குழந்தை அலியாகப் பிறக்கும்.

பிறக்கப்போகும் குழந்தை ஆணா? பெண்ணா? பாடல் எண் 478

"ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரண்டு ஒத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
பாணவம் மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே"

உடலுறவின்போது ஆணிடம் தோன்றும் சுக்கிலம் அதிகமானால் பிறக்கும் குழந்தை ஆணாக இருக்கும். பெண்ணிடம் உண்டாகும் சுரோணிதம் மிகுந்தால் பிறக்கும் குழந்தை பெண்ணாக இருக்கும். இந்தச் சுக்கிலம், சுரோணிதம் இரண்டும் சமமாகக் கலந்தால் குழந்தை அலியாகப் பிறக்கும். கூடலின் போது ஆணின் முயற்சி அதிகமானால் உலகம் முழுதாளும் வல்லமை உடைய குழந்தை பிறக்கும். ஆணின் விந்து திண்மையதாகக் கெட்டிபட்டதாயின் குழந்தை உருவாகாது.

நூறாண்டு வாழ வழி பாடல் எண் 479

"பாய்ந்தபின் அஞ்சோடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் நாலோடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் தவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே".

உடலுறவின்போது சுக்கிலம் கருப்பையில் சேர்ந்த பிறகு ஐந்து மாத்திரைப் பொழுது (வினாடி) பிராணவாயு ஓடினால் பிறக்கும் குழந்தை நூறாண்டு வாழும். நான்கு மாத்திரைப் பொழுது ஓடினால் பிறக்கும் குழந்தை எண்பது ஆண்டு வாழும். இப்படிப் பாய்ந்திடும் மூச்சுக்காற்றை அளவறிந்து அதன்படி செலுத்தச் செய்கின்ற வலிமை யோகப்பயிற்சி உடைய யோகியர்க்கே கைவரக்கூடிய செயலாகும்.

நல்ல குழந்தை பெற பாடல் எண் 480

"பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லைப் பார்க்கிலே".

முன்பாடலில் கூறியபடி மூச்சுக் காற்று கருப்பையில் நான்கு நொடிப் பொழுதுக்குக் குறையப் பாயுமானால் பிறக்கும் குழந்தை குட்டையாக இருக்கும். இம்மூச்சுக் காற்று அளவு மேலும் குறையுமானால் குழந்தை முடமாகப் பிறக்கும். காற்றின் ஓட்டம் தடைப்பட்டால் கூன்முதுகுடைய குழந்தை பிறக்கும். மேற்கூறிய மூச்சுக்காற்று ஆண் மகனுக்கானது. பெண்ணுக்கானது அல்ல.

அழகான குழந்தை பெற பாடல் எண் 483

"கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியுங் கோமள மாயிடுங்
கொண்டநல் வாயு இருவர்க்குங் குழறிடில்
கொண்டதும் இல்லையாம் கோல்வளை யாட்கே".

உடலுறவு கொள்ளும் ஆணுக்கும், பெண்ணுக்கும் மூச்சுக் காற்று ஒத்து இயங்குமானால் பிறக்கும் குழந்தை அழகுடையதாகப் பிறக்கும். இருவருக்கும் அப்போது மூச்சுக் காற்று தடுமாறினால் கரு உண்டாகாது.

கூன், குருடு இல்லாத குழந்தை பெற பாடல் எண் 481

"மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே".

கருத் தரிக்கின்ற காலத்தில் தாயாரின் வயிற்றில் மலம் அதிகம் இருக்குமானால் பிறக்கின்ற குழந்தை மந்த புத்தி உடையதாக இருக்கும். தாயின் வயிற்றில் நீர் மிகுந்து இருக்குமானால் பிறக்கும் குழந்தை ஊமையாக இருக்கும். மலம், நீர் இரண்டும் மிகுந்திருக்கும் போது கருத் தரித்தால் குழந்தை குருடாக பிறக்கும்.

கரு உருவாதல் பாடல் எண் 484

"கோல்வளை உந்தியிற் கொண்ட குழவியுந்
தால்வளை யுள்ளே தயங்கிய சோதியாம்
பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்
போல்வளர்ந் துள்ளே பொருந்துரு வாமே".

ஒரு பெண் தன் கருப்பையில் தாங்கிய குழந்தை உள் நாக்கில் ஒளிவிடும் சோதி ஒளிபோலத் திகழும். குழந்தை ஆணாகவோ, பெண்ணாகவோ வளர்ந்து சூரியனைப் போல பொன் உருப்பெற்று கருப்பையில் வளர்ந்து முழு உருவம் பெறும்.

17 ம் பக்கத் தொடர்ச்சி....

பெண்களை விருந்துக்கு அழைத்துபின்....

பலாத்காரம் செய்பவர் சினிமாவில் வரும் வில்லனைப் போல பரட்டைத் தலை, குளிக்காத உடலுடன் வருவார் என நினைக்காதீர்கள். ரொம்ப டீசண்டான பார்ட்டியாக இருப்பார்.

80 முதல் 90 விழுக்காடு டேட் ரேப்கள் மிகவும் தெரிந்த நபர்களால், அவர்களுடைய அல்லது பெண்களின் வீடுகளில் வைத்தே நடக்கின்றன. எனவே தெரிந்த ஆள் தானே என அசால்ட்டாக இருக்க வேண்டாம்.

பாதி குடித்த மதுவையோ, குளிர் பானத்தையோ வைத்து விட்டு தூரமாய் போகாதீர்கள். குறிப்பாக பார்ரூம் போகும் நேரத்தில் கூட யாராவது ஒரு சின்ன மாத்திரை போட்டு உங்களை வீழ்த்தி விடலாம் ! எனவே எச்சரிக்கை தேவை.

இத்தகைய இடங்களுக்கு நண்பர்களுடன் சேர்ந்து ஒரு குழுவாகச் செல்லுங்கள். ஒருவரை ஒருவர் கண்காணித்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு முழு நம்பிக்கை இல்லாத இடங்களுக்குப் போகாதீர்கள். பொதுவாக இரவு விடுதி, நடன அரங்கு போன்ற இடங்களுக்கு சரியான பாதுகாவலோ, தோழியரோ இல்லாமல் போகவே போகாதீர்கள்.

பார்களுக்கோ, மது அருந்தும் இடங்களுக்கோ சென்றால், மதுவையே தொடாத ஒரு நண்பரையும் கூடவே கூட்டிப் போங்கள்.

எப்போதும் அலர்ட்டாக இருங்கள். ஏதேனும் தவறு நடக்கலாம் என உள்ளுணர்வு எச்சரித்தால் தாமதிக்காமல் வெளியேறிவிடுங்கள்.

ரொம்ப அன்பான பெண்கள் பாதிக்கப்பட மாட்டார்கள், அல்லது ரொம்ப அமைதியான பெண்கள் தப்பித்துக் கொள்வார்கள் என்றெல்லாம் வீண் கற்பனை வளர்க்க வேண்டாம். பாதிப்பு யாருக்கு வேண்டுமானாலும் நேரிடலாம். எப்போது வேண்டுமானாலும் நேரிடலாம்.

தெரியாத நபர் உங்களுக்கு ஏதேனும் பானத்தை வலியத் தந்தால் வேண்டாம் என நேரடியாகவே மறுத்து விடுங்கள்.

இணையத்தின் மூலம் கண்டெடுத்த நண்பர்களுடன் தனியே சந்திப்பதைத் தவிருங்கள். குறிப்பாக அவர்களுடன் மதுவெல்லாம் அருந்தவே அருந்தாதீர்கள்.

ஆண்களுடன் தனியே இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால், பாலியல் சார்ந்த உரையாடல்களை தவிர்த்து விடுங்கள். போதை விஷயங்களையும் தொடாதீர்கள்.

உங்கள் டின்னருக்காக ஆண் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், செலவு செய்தாலும் அதற்காக பாலியல் பரிகாரம் செய்ய வேண்டியதே இல்லை. எந்த நிலையிலும் உங்கள் உறுதியில் இருந்து சறுக்காதீர்கள். கொஞ்சம் இடம் கொடுத்தால் சிக்கல் பெரிதாகும் என்பது உறுதி.

ஒரு வேளை நீங்கள் பாதிக்கப்பட்டால் முதலில் உங்கள் குற்ற உணர்விலிருந்து வெளியே வாருங்கள். "ஐயோ என்னால் தான் இப்படி நடந்தது...", " நான் இப்படி செய்திருக்கக் கூடாது", " நான் நோ சொல்லியிருக் கணும்..." , "நான் சொல்றதை இனிமே யாரும் நம்ப மாட்டாங்க", "என்னை ரொம்ப மோசமான பொண்ணுன்னு நினைப்பாங்க" என்றெல்லாம் புலம் பாதீர்கள். தைரியமாகக் காவல் நிலையத்தில் புகார் கொடுங்கள்.

விழிப்பாய் இருந்தால், விழாமல் இருக்கலாம்.

காத்திருப்பு

உன்னோடு உரையாடுவதற்காக சேமித்த
வார்த்தைகளோடு காத்திருந்தேன்.

உன் வருகை தாமதமாக எனது எதிர்பார்ப்பு
இன்னும் அதிகமாகவே இருந்தது.

இது ஏற்கனவே நமக்கு பழக்கப்பட்ட இடமாயினும்
இந்த சந்திப்பு மிக அவசியமாயிருந்தது.

விரலை தொடுவதா தோளில் சாய்வாதா - என
பல கற்பனைகளோடும் இருந்தேன்.

நீண்ட நேரமாய் காத்திருந்ததற்காக - சிறு கோபத்தையேனும்
உனக்கு வெளிப்படுத்த கூடாது என நினைத்திருந்தேன்.

ஊட்டி விடுவதற்காக கையில் ஏதாவது கொண்டு
வருவாய் என்று மிகுந்த பசியோடும் இருந்தேன்.

நீ வந்ததும் இந்த நாள் நகராமல் இருக்க கூடாதா
என எங்கிக் கொண்டும் இருந்தேன்.

முதல் முதலில் உன்னை பார்ப்பது போன்ற அவாவோடு
இருந்தும் - அது கடைசி சந்திப்பாய் கூட அமையவில்லை

Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன்– தமிழ்
Tamil- Deutsch
Deutsch- Tamil
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும் புத்தம் புது
டிசைன்களில் தங்க நகைகள்
ஒரே இடத்தில் தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும் குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள் மற்றும் இலத்திற்குத்
தேவையான மனிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
சித்திரம் Tv
எம்மிடம் கிடைக்கும்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main

Pirruntha Silks
பிருந்தாஸ்
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள்
மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகால
நம்பிக்கை மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976

ஆலயங்களின் கொடியேற்ற தேர் உற்சவங்கள்

May,June,July2017

யேர்மனியில் தேர்க்காலம்

ஆலய உற்சவங்கள்

தொகுப்பு: ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்

சுட்காட் விநாயகர் ஆலயம்

கொடியேற்றம்	03.06. 2017	Lehmfeld Str 18.
தேர்த்திருவிழா	11.06.2017	70374 Stuttgart.
தீர்த்தத்திருவிழா	12.06. 2017	07191 960 793

ஹம் காமாட்சிஅம்பாள் ஆலயம்

கொடியேற்றம்	12.06.2017	Siegenbeck Str 04 - 05
தேர்த்திருவிழா	25.06.2017	59071 Hamm - Untrop
தீர்த்தத்திருவிழா	26.06.2017	02388 302223.

டோட்மூண்ட் சிவன்கோவில்

கொடியேற்றம்	24.06.2017	Kiefer Str 24
தேர்த்திருவிழா	02.07.2017	44225 Dortmund
தீர்த்தத்திருவிழா	03.07.2017	0231 72 51 51 65

நாகபுசணி அம்பாள் கோவில் பிறாங்போட்

கொடியேற்றம்	25.06.2017	Adalbert Str 61
தேர்த்திருவிழா	08.07.2017	60486 Frankfurt/M
தீர்த்தத்திருவிழா	09.07.2017	069 979 45 618

வுப்பெற்றால் நவதுர்க்கா அம்பாள் ஆலயம்

கொடியேற்றம்	12.05.2017	Hünefeld Str 63B
தேர்த்திருவிழா	20.05.2017	42285. Wuppertal.
தீர்த்தத்திருவிழா	21.05.2017	0202 479 6017

கையில் புறோன் கந்தசாமி கோயில்

கொடியேற்றம்	20.05.2017	Siemens Str 11
தேர்த்திருவிழா	28.05.2017	74177 Bad Friedrichshall
தீர்த்தத் திருவிழா	29.05.2017	071 31 205 93 43

எசன் முருகன்கோவில்

திருவிழா ஆரம்பம்	01.07.2017	Kloster Str 49 a,
தேர்த்திருவிழா	09.07.2017	45139 Essan
தீர்த்தத்திருவிழா	10.07.2017	0201 80 67 433.

கொமஒஸ்பாக் குறிஞ்சிக் குமரன் முருகன்கோவில்

கொடியேற்றம்	01.07.2017	Industrie Str 7
தேர்த்திருவிழா	09.07.2017	51643 Gummersbach
தீர்த்தத்திருவிழா	10.07.2017	02261 501 5964

கிறிமீல்ட் நாகபுசணி அம்பாள் கோவில்

கொடியேற்றம்	01.07.2017	Girmesgath 85,
தேர்த்திருவிழா	09:07.2017	47803 Krefeld.
தீர்த்தத்திருவிழா	10.07.2017	02151 565 00 45

ஹம் திருநல்லூர் ஆறுமுகவேல்அழகன் ஆலயம்

கொடியேற்றம்	15.07.2017	Room Str 2a
தேர்த்திருவிழா	23.07.2017	59065 Hamm
தீர்த்தத்திருவிழா	24.07.2017	02381 29103

சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்

கோடியேற்றம்	22.07.2017	Robert koch Str 5a
தேர்த்திருவிழா	30.07.2017	58239 Schwerte.
தீர்த்தத்திருவிழா	31.07.2017	02304 167 21

Tel: 02349020540
fax: 0234 2878873

TITANIC

International Restaurant

Bochum நகரில்...

E-Mail: info@lieferando.de

சிறு கொண்டாட்டம் ஆனாலும்
சுவையான பெருவிருந்து அளித்து மகிழ்விப்போம்!

ஆசிய நாட்டு உணவுகள், மேக்சிக்கான், இத்தாலிய நாட்டு உணவுகள் ஏதுவானாலும், சுவைக்கு பெயர் பெற்ற உணவகம்.

100 இருக்கைகளுடன் அழகான இனிய வரவேற்புடன் அமைந்த உணவகம். ஆசிய உணவுகள் குறிப்பாக இந்திய இலங்கை உணவுகள் 20 விருந்தினர்களுக்கு மேல் வருகைதரும் போது சிறப்பான **Buffet** சுடச்சுட வழங்கப்படும் **(Ab14.99€)**

தினமும் எமது உணவகத்தில் மேக்சிக்கான், இத்தாலிய நாட்டு உணவுகளே தயாரிக்கப்படினும் நம்மவர்களின் சிறப்பு விருந்துகளின் போது, இலங்கை, இந்திய உணவுகள் தரமாக சுவையாக செய்து தரப்படும்.

எனவே உங்கள் பிறந்தநாள், திருமணநாள் மற்றும் ஒன்று கூடல்கள் எதுவானாலும் எம்மை நாடுங்கள்! எமது சுவைமிக்க உணவுடன் கூடி மகிழுங்கள்

Inhaber: Kasippillai Sooriyakumar

Öffnungszeiten
Montag, Mittwoch - Freitag
11:00 - 14:30, 17:00 - 22:45
Samstag, Sonntag 11:00 - 22:45

100 இருக்கைகளுடன் அழகான உணவகம்

TITANIC Internationales Restaurant / Unter Str 91 / 44892 Bochum

வெற்றிமணியில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 0163 199 2333
புதிய விளம்பரங்களுக்கு மாதம் தோறும் 14ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்

புனித திருத்தலங்களை நோக்கிய திருயாத்திரை 2017

புதுமைமிகு லூர்த் அன்னைத் திருத்தலம் நோக்கிய திருயாத்திரை

17.07.2017 முதல் 20.07.2017 வரை (4 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட **140€** மட்டுமே
14.08.2017 முதல் 18.08.2017 வரை (5 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட **150€** மட்டுமே
21.08.2017 முதல் 25.08.2017 வரை (5 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட **150€** மட்டுமே

போர்த்துக்கல் புனித பாத்திமா அன்னைத் திருத்தலம் நோக்கிய திருயாத்திரை

01.08.2017 முதல் 09.08.2017 வரை (9 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட **395€** மட்டுமே
14.08.2017 முதல் 22.08.2017 வரை (9 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட **395€** மட்டுமே

ரோம் புனித வத்திக்கான் நோக்கிய புனிதப்பயணம்

22.07.2017 முதல் 30.07.2017 வரை (9 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி உட்பட 395€ மட்டுமே

இறைமகன் அவதரித்த
ஜெருசலேம் புனிதப்பயணம்

23.10.2017 முதல் 29.10.2017 வரை (7 நாட்கள்) திருயாத்திரை
போக்குவரத்து, தங்குமிடவசதி
உட்பட **1250€** மட்டுமே

தொடர்புகளுக்கு: J.Ranjith 0049 21 51 600 2101 / 0049 173 406 5946

ரஜினி பேட்டி என்றாலே பரபரப்புதான 1981

பத்திரிக்கையாளரை உதைப்பேன்

ரஜினி– லதா காதல் திருமணம்!

1981

"பத்திரிக்கையாளரை உதைப்பேன்" என ரஜினி அளித்த பேட்டி பரபரப்பு மூட்டுமா இல்லையா? அப்படி ஒரு பரபரப்பு பேட்டியை விகடன் பொக்கிஷத்தில் பார்க்க நேரிட்டது. நீங்களும் படித்துப் பாருங்கள்... ரஜினியின் "தில்" புரியும்....

மாலை ஏழு மணி. போயஸ் கார்டனில் இருக்கும் ரஜினியின் புது வீட்டுக்குப் போயிருந்தபோது, ரஜினி மாடியில் குளித்துக்கொண்டு இருப்பதாகச் சொன்னார்கள்.சற்று நேரத்தில் ரஜினி இறங்கி வந்தார்.

"வாங்க, போகலாம்!" என்றபடியே விறுவிறுவென்று காரில் ஏறினார். வெள்ளை நிற .ம்பியட் வுஆரு 5004. சினிமாவில் போவது மாதிரி ஒரே மூச்சில் ரிவர்ஸில் போனார். அலட்சியமாக ஸ்டியரிங்கை உடைத்தார். மௌபரேஸ் ரோடு சிக்னலின் சிவப்பு விளக்கு, அவரை பிரேக் போட்டு நிற்க வைத்தது!

"ஐ வாஸ் எ கண்டக்டர்னு நான் சொல்லிக்கிறதே இல்லை. ஐயாம் எ கண்டக்டர்னுதான் இன்னிக்கும் நினைச் சுக்கறேன்..." என்றார் ரஜினி. சிக்னலில் பச்சை விளக்கு."இப்போ எனக்குச் சொத்து, சுகம்,வீடு, வாசல்னு எல்லாம் வந்து சேர்ந்திருக்கு. இந்த மயக்கத்திலே நான் பாஸ்ட்டை மறுந்துட நினைக்கலே. மார்க்கெட் இருக்கிற வரைக்கும்தான் மரியாதைனு எனக்குத் தெரியும். எந்த நேரத்திலேயும் பழைய நிலைமைக்கே போய்விடுவோம்கறதும் எனக்குப் புரியா மலில்லை..."

மெரினா காந்திசிலைக்கு அருகில் இடது பக்கம் திரும்பி, பீச் ரோடில் விரைகிறது 5004. 'கர்ஜனை' படத்துக்காகப்பொருட் காட்சி சாலையில் ரஜினிக்கு அன்று படப் பிடிப்பு.

இறங்கி 'ரஜினி ஸ்டை' லில் உள்ளே விரைந்தார்!

"யூ நோ ஸம்திங்... ஸ்மோக்கிங், டிரிங்க்கிங் இரண்டையும் நான் இப்போ ரொம்பக்

குறைச்சுட்டேன்!" என்றார் ரஜினி. "என்கிட்டேஒரு ஹாபிட்... யாராவது ஒரு காரி யத்தைச் செய்யாதேனு சொன்னா, அதையே அதிகமா பண்ணுவேன். செய்துதான் ஆகணும்னு கம்ப்பெல் பண்ணா, நிச்சயம் அதைச் செய்ய மாட் டேன்..!"

சமீப நாட்களில் பத்திரிகைகளில் பரபரப்பாக எழுதப்பட்ட தன் திருமணத்தைப் பற்றிப்பேசத் தொடங்கினார் ரஜினி.

"ஒரு வெள்ளிக்கிழமை அன்னிக்கு சௌகார்ஜானகி வீட்டிலே 'தில்லுமுல்லு' ஷ¨ட்டிங்! மாடியிலே இருந்த என்கிட்டே எத்திராஜ் காலேஜ்லேருந்து பேட்டிக்காக ஸ்டூடன்ட்ஸ் வந்தி ருப்பதா சொன்னாங்க. ஷாட் முடிஞ்சதும் கீழே போனேன். ஒரு பொண்ணு ரொம்ப அழகா இருந்தா! 'ஐயாம் லதா'ன்னு தன்னை அறிமுகப்படுத்திக் கிட்டா..." என்ற ரஜினி, தனக்கு லதாவுடன் நட்பு ஏற்பட்டதைப் பற்றி, அவரோடு பழகிய நாட் களைப் பற்றி, அவரையே மனைவி யாக்கிக்கொள்ள முடிவு செய்த தைப் பற்றிக் கிடுகிடுவென்று சொன்னார்.

"'பொல்லாதவன்' படப் பிடிப் புக்கு மைசூர் போயிருந்தப்போ, ஐ மெட் மை பிரதர்! அவர்கிட்டே லதாவைப் பற்றிச் சொன்னேன். அவருக்கு ஷாக்! 'அந்தப் பொண்ணு நம்ப காஸ்ட் இல் லேன்னு சொல்றே. மராத்தி யிலே உனக்குக் கிடைக்காத பொண்ணா மதராஸ்லே கிடைச் சுடப் போவுது'னு சொன்னார். 'நான் சுகமா இருக்கணும்னு நீங்க ஆசைப்பட்டா, சந்தோஷமா இருக்கணும்னு விரும்பினா லதாவை மனைவியாக்கிக்க எனக்கு அனுமதி கொடுங்க'னுசொல்லிட்டு வந்துட்டேன்.

என் பிரதர் மதராஸ் வந்தார். லதாவைப் பார்த்தார். ஹி ஸெட் ஓ.கே!" என்ற ரஜினி, பழைய சந்தோஷம் புதுப்பிக்கப்பட்ட மகிழ்ச்சியில், ஒரு 555-ப் பற்ற வைத்துக்கொண்டார்.

நான் என்னமோ எல்லாத்தையும் மறைச்சுத் திருட்டுத்தனமா தாலி கட் டிட்டேன்னு சில பேர் நினைக்கிறாங்க. இட் இஸ் நாட் ஸோ! நடிக்க வந்த பின் நாங்க பப்ளிக் பிராப்பர்ட்டி தான்! பட்... எங்களுக்கு பிரைவஸியே கிடையாதா? எங்களுக்குன்னு சில பாலிஸிங்க இருக்கக் கூடாதா? கோயிலுக் குப் போய் கடவுள் சாட்சியா தாலி கட்ட ணும்னு நான் விரும் பினதுதப்பா?" கொஞ்சம் சீரியஸாகவே பேசினார் ரஜினி.

தொடர்ச்சி 30 ம் பக்கம்

Dortmund நகரில் K.K.L
Textilien Schmuck Haushaltsware

திருமணப் பட்டுச்சேலைகள்
பாட்டிசாறிகள் பஞ்சாபிகள்
மற்றும் அழகிய
இமிரேஷன் நகைகள்
அனைத்திற்கும் உங்கள் மனதில்

K.K.L

சேலைகளுக்கு
பிளவுஸ் தைத்துக்
கொடுக்கப்படும்.

புதிதாய் பூத்த
மலர் போல்
மனங்கவர்
சேலைகள்

Rheinische str.56 - 44137 Dortmund Tel: 0231 96 98 6610

கவிப்பேரரசு வைரமுத்து ஏழாவது முறையாக தேசிய விருதைச் சொந்தமாக்கி தமிழுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்!

வெற்றி மைந்தன்

வடுகப்பட்டி வைரம் வடநாட்டில் மீண்டும் ஜொலித்தது !

கவிப்பேரரசு வைரமுத்து ஏழாவது முறையாக தேசிய விருதைச் சொந்தமாக்கி தமிழுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்.

முதல் மரியாதை படத்தில் தேசிய மரியாதையை முதன் முதலாகச் சொந்தமாக்கிய கவிப்பேரரசு, ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ஆறாவது முறையாக தேசிய விருதை, தென்மேற்குப் பருவக்காற்று படத்துக்காகப் பெற்றார். இப்போது ஏழாவது விருது அவருக்கு வரமாகியிருக்கிறது.

தமிழால் வளர், தமிழை வளர் எனும் சொல்லுக்கேற்க கவிதையாகவும், கவிதைக்காகவும், கவிதையாலும் வாழ்கின்ற கவிப்பேரரசு அவர்களின் ஏழாவது விருதுக்காக வெற்றிமணி அவரை மனமாரப் பாராட்டுகிறது !

எந்தப் பக்கம் காணும் போதும் வானம் ஒன்று !
யாம் எந்தப் பக்கம் போகும் போதும் உம் கீதம் உண்டு !

அடுத்தடுத்த விருதுகள் வசமாகட்டும்
தமிழ் உம்மால் வாசமாகட்டும் !

கவிப்பேரரசுவுக்கு தேசிய விருதை மாலையாய் தந்த பாடல் இது தான்.

எந்தப் பக்கம் காணும் போதும் வானம் ஒன்று
நீ எந்தப் பாதை ஏகும் போதும் ஊர்கள் உண்டு
ஒரு காதல் தோல்வி காணும் போதும் பாடல் உண்டு
சிறு கரப்பான் பூச்சி தலை போனாலும் வாழ்வு உண்டு
அட ரோராப் பூக்கள் அழகால் அது தேனை சிந்தும்
என் ராஜாப் பையன் நீ அழுதால் அதில் ஞானம் மிஞ்சும்
உன் சோகம் ஒரு மேகம் நான் சொன்னால் அது போகும்
உன் கண்ணீர் ஏந்தும் கன்னம் நானாகும்

எந்தப் பக்கம் காணும் போதும் வானம் ஒன்று
நீ எந்தப் பாதை ஏகும் போதும் ஊர்கள் உண்டு

எப்போதுமே இன்பம் என்றால் முன்னேற்றமே ஏது
எப்போதுமே பகலாய்ப் போனால் வெப்பம் தாங்காது
மனசை சலவை செய்ய ஒரு கண்ணீர் துளி தான் உண்டு
உன் உயிரை சலவை செய்ய் ஒரு காதல் நதி உண்டு
உன் சுவாசப் பையை மாற்று அதில் சுத்தக் காற்றை ஏற்று
நீ இன்னோர் உயிரில் இன்னோர் பெயரில் வாழ்ந்து விடு

சந்தர்ப்பமே தீமை செய்தால் சந்தோஷமே ஏது
சல்லடையில் தண்ணீர் அள்ளி தாகம் தீராது
தாகம் தீரத் தானோ நீ தாய்ப் பால் மழையாய் வந்தாய்
நம் உறவின் பெயரே தெரியாதம்மா உயிரை தருகின்றாய்
உன் உச்சந்தலையை தீண்ட ஓர் உரிமை உண்டா பெண்ணே
உன் உள்ளங்காலில் தலையை சாய்த்தால் போதும் கண்ணே...

எந்தப் பக்கம் காணும் போதும் வானம் ஒன்று
நான் எந்தப் பாதை ஏகும் போதும் ஊர்கள் உண்டு
நீ தாவித் தாவித் தழுகும் போதும் தாய்மை உண்டு
நான் நெஞ்சாங்கூட்டில் சாயும் போதும் நேர்மை உண்டு
உன் வார்த்தைக்கு பின்னால் என் வாழ்வே பின்னால்
உன் மடியில் எந்தன் கண்ணீர் வடியுமடி
உன் சோகம் ஒரு மேகம் நான் சொன்னால் அது போகும்
உன் கண்ணீர் ஏந்தும் கன்னம் நானாகும்

ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா குரந்தர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
Westendorf Str.41 - 44287 Dortmund
மே மாத மலிவு விற்பனை
எமது மலிவு விலைகளை அறிந்துகொள்ள
Web :www.milinimpex.de
Tel: 0231 45 96 17
info@milinimpex.de
எமது நிறுவனம்
Mo-Sa 10.00-இருந்து 18.00 வரை
உங்களுக்காகத் திறந்திருக்கும்

பசுமையான மரக்கறிகள் கடலுணவும் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Web :www.milinimpex.de
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

கஸ்தூரி பாவனா கொடுத்த தைரியம்

பச்சையாகவே பேசப் புறப்பட்டுவிட்ட நாயகிகள்!

படுத்தாத்தான் இடம் கிடைக்கும் என்ற துணிச்சலான பேச்சு!

திருவனந்தபுரம்: மலையாள திரையுலகில் தான் போராடிக் கொண்டிருந்த போது சீனியர் நடிகர்கள் மற்றும் இயக்குனர்கள் தன்னை படுக்கைக்கு அழைத்ததாக நடிகை பார்வதி மேனன் தெரிவித்துள்ளார். பூ படம் மூலம் கோலிவுட் வந்தவர் கேரளாவை சேர்ந்த நடிகை பார்வதி மேனன். சென்னையில் ஒரு நாள், மரியான், உத்தம வில்லன் உள்ளிட்ட தமிழ் படங்களில் நடித்துள்ளார். இந்நிலையில் அவர் மலையாள தொலைக்காட்சி சேனல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கூறியதாவது,

பெண்கள் பட வாய்ப்புக்காக பெண்களை படுக்கைக்கு அழைக்கும் ஆட்கள் சினிமா துறையில் உள்ளனர். என்னையும் கூட கேட்டிருக்கிறார்கள். அதுவும் படுக்கைக்கு அழைப்பது அவர்களின் உரிமை போன்று அழைத்தார்கள். முடியாது முடியாது என்னை படுக்கைக்கு அழைத்தவர்களிடம் முடியாது என்று கூறிவிட்டேன். சினிமா துறையில் வளர்ந்துவிட்டால் படுக்கைக்கு அழைக்க மாட்டார்கள். மலையாளம் மலையாளம் மலையாள திரையுலகில் வாய்ப்புக்காக படுக்கைக்கு அழைக்கும் பழக்கம் உள்ளது.

இது பல துறைகளில் உள்ளது. இது தான் உண்மை. அப்படி இருக்கும்போது நாம் ஏன் இதை கேட்டு அதிர்ச்சி அடைகிறோம்?

நான் சிலரின் விருப்பத்தை நிறைவேற்றாததால் எனக்கு முன்பு பட வாய்ப்புகள் வராமல் இருந்தது. தமிழ், கன்னடம், இந்தி உள்ளிட்ட எந்த திரையுலகிலும் என்னை யாரும் படுக்கைக்கு அழைக்கவில்லை. இங்கு தான் இங்கு தான் மலையாள திரையுலகில் மட்டும் தான் வாய்ப்பு வேண்டும் என்றால் படுக்கைக்கு வா என்று அழைத்தார்கள். நான் சர்ச்சையை கிளப்ப விரும்பவில்லை. இது தான் உண்மை என்று அனைவருக்கும் தெரியும். சீனியர் நடிகர்கள் சீனியர் நடிகர்கள் ஒரு காலத்தில் மலையாள திரையுலகில் சீனியர் நடிகர்கள் மற்றும் இயக்குனர்கள் வெளிப்படையாகவே என்னை படுக்கைக்கு அழைத்தார்கள். அப்படிப்பட்டவர்களுடன் நான் பணியாற்றவில்லை. மலையாள திரையுலகில் இப்படி நடந்ததால் நான் தமிழ், கன்னட படங்களில் நடிக்கச் சென்றேன். சினிமா துறை என்றால் இப்படித்தான் என்று சிலர் என்னை சமாதானம் செய்தனர். வேண்டாம் படுத்து தான் படம் பண்ண வேண்டும் என்றால் அது எனக்கு வேண்டாம். நான் எங்காவது சென்று ஏதாவது செய்கிறேன். முடியாது என்று சொல்கிற பவர் நமக்கு உண்டு என்பதை நாம் உணர வேண்டும். கமெண்ட் சில சீனியர் நடிகர்கள் என் உடலை பார்த்து அசிங்கமாக கமெண்ட் அடித்தனர். இதை பார்த்து எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஒரு பெண்ணை அசிங்கமாக கமெண்ட் செய்வது சாதாரண விஷயம் என நினைக்கிறார்கள் என்றார் பார்வதி மேனன்.

பத்திரிக்கையாளரை உதைப்பேன்! 29ம் பக்கத் தொடர்ச்சி....

"அன்னிக்குப் பத்திரிகை நண்பர்களை வீட்டுக்கு வர வழைச்சு, இதையேதான் சொன் னேன். நானும் லதாவும் மாலை போட்டுக்கிட்டு முன்கூட்டியே எடுத்து வெச்சிருந்த போட் டோவை அவங்ககிட்ட கொடுத்து, 'நாளைக்குத் திருப்பதியிலே என்னோட கல்யாணம் நடந்து முடிஞ்சதும், நீங்க இந்த போட்டோவைப் போடுங்க'ன்னு கேட்டுக் கிட்டேன்" என்று சொன்னபோது, ரஜினி கொஞ்சம் உணர்ச்சிவ சப்படுவது மாதிரி தெரிந்தது.

"திருப்பதி கோயில்லே மாலை மாற்றி, தாலி கட்ட நான் ஸ்பெ ஷல் பர்மிஷன் வாங்கி வெச்சிருந்தேன். அங்கே பத்திரிகைக்காரர் களும் ரசிகர்களுமா கூட்டம் சேர்ந்துட்டா, என் பெயர் கெட்டு விடு மோன்னு அஞ்சினேன். இத்தனை ஏன்..? சினிமா ∴பீல்டுலே ஒருத் தரைக்கூட நான் இன்வைட் பண்ணலையே..! கூட்டம் வேண்டாங் கறதுக்காக இரண்டு பேரைக் கூப்பிட்டுநாலு பேரை விட்டுட்டா நல்லா இருக் காதே! இதையெல்லாம் கால் குலேட் பண்ணித்தான் பத்திரிகை நண்பர்களிடம் பேசறப்ப, 'திருப்ப திக்கு கேமராவோட வந்து போட் டோவெல்லாம் எடுக்காதீங் க'ன்னு ரிக்வெஸ்ட் பண்ணிக் கேட்டுக் கிட்டேன்.

'வந்தா?'ன்னு ஒரு பிரஸ் நண்பர் கேட்டார். 'உதைப்பேன்'னு சொன்னேன். உடனே இன்னொருத்தர் சொன்னார்... 'அந்த மாதிரி வார்த்தைகளை எல்லாம் யூஸ் பண் ணாதீங்க. அதை நாங்க பப்ளிஷ் செய்துட்டா, பின்னாலே அசிங்கமா போயிடும்'னு. அந்த மாதிரி நேருக்கு நேர்தவறைச் சுட்டிக் காட்டி னப்போ, ஐ வாஸ் வெரி ஹாப்பி! உடனே 'ஸாரி' சொன்னேன்.கூடவே, 'இப்போ ஸாரி சொல் லிட்டேன்னு கல்யாணத்துக்கு வந்துடாதீங்க. கேமராவோட யாரையாவது பார்த்துட்டா, உதைக்கறதைத் தவிர எனக்கு வேற வழி தோணாது'ன்னும் சொன்னேன். பிகாஸ், ஆண்டவ னுக்கும் மனச் சாட்சிக்கும் தவிர, வேறு யாருக்குமே நான் பயப்படறதில்லே!"

ரஜினியின் குடும்பத்திலிருந்து சில பேரும், லதா வீட்டினர் சிலரும் (26.02.1981) சென்ற மாதம் 26-ம் தேதி திருப்பதியில் இருந்திருக் கிறார்கள். விடியற்காலை 3-30 மணிக்குக் கோயிலுக்குப் போயிருக்கிறார்கள். பிரார்த்தனையை முடித்துவிட்டு 4-25-க்கு மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். 4-30-க்கு லதாவின் கழுத்தில் மூன்று முடிச்சு விழுந்திருக்கிறது. (ஆறு மணிக்கு எமகண்டம் வந்து விடும் என்பதாலும், அதற்குப் பிறகு ஒன்பது மணிக்குத்தான் முகூர்த்த நேரம் என்பதாலும் விடியற்காலை நேரத்தைத் தேர்ந் தெடுத்திருக்கிறார்.) உடனே கிளம்பித் திருச்சா னூரில் தரிசனத்தை முடித்துக்கொண்டு, காலை 9-30 மணிக்கெல்லாம் சென்னை திரும்பிவிட்டார்கள். பத்து மணிக்கெல்லாம் ஏவி.எம்- மில் 'நெற்றிக்கண்' செட்டுக்குப் போய் விட்டாராம் ரஜினி!

- நன்றி விகடன் பொக்கிஷம்


Hückelhoven நகரில்
துரித பணமாற்றுச் சேவை
Asiatischer Super markt
ஆசியா சமுத்திரம்
பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Vijay tv agent
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30
R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan
TEMPO MONEY TRANSFER
VALUTRANS MONEY TRANSFER
Ria Money Transfer
MoneyGram money transfer


உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு

EurAsian - Tours

LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
கோடை கால விடுமுறை 2017
பதிவுக்கு முந்துங்கள்

Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
VALUTRANS MONEY TRANSFER
தூரித பண மாற்றுச் சேவை!
Further Str. 156
41462 Neuss
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com

Jasmine Silk House

புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்

காஞ்சிபுரம் நம்பர் 1 பட்டு
சாரிகள் நம்மிடம் கிடைக்கும்

என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும் பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள், அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு. நம்மை நாடிவரக் காரணம், அதுவே!

ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
HP:0173 1937 325
Tel:02102 844744
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen

ASIA BAZAR

துரித பண மாற்றுச் சேவை!

Ria Money Transfer
MoneyGram International Money Transfer

ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...

VALUTRANS MONEY TRANSFER

உரிமையாளர்:
பா. கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

வீட்டுக்கடன்

1,0%
வட்டிவீதத்திலிருந்து

நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல் "Umschuldung"

தொடர்புகளுக்கு:
gothab Finance 0231/53375365 0152/53961138
Rheinische Str. 72, 44137 Dortmund 0231/10876361 Th. Gobinath

SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main

India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

StaR - Impex

Asia & Afro Großhandel & Einzelhandel

Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de

StaR Impex :
Inh :K.Sivasubramaniam

Kipper Str.3 44147 Dortmund Germany